# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, கார்த்: 9 (24-11-74) ஞாயிறு நவ. 24 ஜுல்கஃ 9 புத்தகம் 28 இதழ் 14


## நில உச்சவரம்பை 10 ஏக்கராக குறையுங்கள்!

"நிதியமைச்சர் முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் சோசலிசத்தை நோக்கி துணிவுடன் அடியெடுத்துவைக்கப்படவில்லை! பிறநாட்டுக் கம்பெனிகள் தோட்டங்கள் முகவர் நிலையங்கள் முதலியனவற்றை தேசியமயமாக்குவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. காணி உச்சவரம்பு, வீட்டு உச்சவரம்பு முதலிய நல்ல கொள்கைகள் நடைமுறைக்கு வந்தாலும் அவைகூட உண்மையான சோசலிச எல்லைக்கு உட்பட்டவை என்று கூற முடியாதது. காணி உச்சவரம்பை பத்து ஏக்கராகக் குறையுங்கள்! அதை நாம் வரவேற்கிறோம்! 50ஏக்கர் என்று இருப்பதை 10ஏக்கராக குறைத்தால்தான், அது உண்மையானசோசலிச உச்சவரம்பாக இருக்கும்! நில உச்சவரம்பை பத்து ஏக்கராகக் குறைப்பதற்கு எங்களுடைய கட்சியினுடைய ஒத்துழைப்பு என்றும் உண்டு!

— தேசிய அரசுப் பேரவையில்,
காவலூர்,
பா. உ. இரத்தினம்.

## தலைமை ரௌடிக்கு செருப்படி!

தமிழினத்தை காட்டிக்கொடுத்து—ஆளுங்கட்சியை அண்டிப்பிழைத்து — வயிறு கழுவி துரோகம் புரிந்து வரும் கிழக்கிலங்கைத் தரகர்களிடையே கோஷ்டிப் பூசலும், குடுமிபிடிச் சண்டைகளும் இப்போது உச்சக் கட்டத்தையடைந்துள்ளனவாம். இதன் காரணமாக, அண்மையில் நடைபெற்ற மோதுதல் ஒன்றின்போது ரௌடித் தனத்துக்குபெயர் பெற்ற ராஜ தரகர் ஒருவருக்கு அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே செருப்பினல் நன்முக சாத்தினர்களாம்! இதுபற்றியே மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் மக்கள் பேசிப்பேசிச் சிரிக்கின்றனர்!

# அரசாங்கக் கட்சிக்குள் அதிகாரப் போட்டி!

## சமசமாஜிகளுக்கு எதிராக ஊரடங்கு சட்டப் பிரயோகம்!

### ஐக்கிய முன்னணி பிளவுபடுவது நிச்சயம்!

ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குள் மேலும் மூடிமறைக்க முடியாத அளவுக்கு வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வெடிப்புக்கு தற்காலிய ஒட்டுப்போடுவதில் ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளின் தலைவர்களும் வெற்றிபெற்றலும், நீண்ட நாளைக்கு இந்த ஒட்டு வேலை நிலைக்காதென்றும் விரைவில் பிளவு ஏற்பட்டே திருமென்றும் அரசியல் அவதானிகள் ஹேஸ்யம் கூறுகின்றனர்:-



1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர், ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளுக்கிடையேயும் இருந்து வந்த உட் பூசலும் பிளவும் இப்போது பூதாகாரமாக உருவெடுத்து விட்டது. அரசாங்கக் கட்சியிலுள்ள அதிகார வெறிபிடித்த மூன்று கட்சிகளும் சோசலிசத்தின் பெயரால் ஒன்றையொன்று பிடித்து விழுங்குவதில் போட்டி போட்டு நிற்கின்றன.



கடந்த சனிக்கிழமை நிதியமைச்சரும் சமசமாஜக் கட்சித் தலைவருமான டாக்டர் என். எம். பெரேரா அவர்களே முன்னின்று நடத்தவிருந்த ஊர்வலத்தை சுதந்திரக் கட்சியைச் சேர்

—5-ம் பக்கம் பார்க்க

## பிரதமர் மீது சமசமாஜிகள் தாக்கு!

"தேசியமயமின்றி சோசலிசத்திற்கு இடமில்லை. ஒரு சில நிறுவனங்களை மட்டும் தேசியமயமாக்கிவிட்டு மிகுதியை முதலாளித்துவத்திடம் விட்டுவிடுவது சோசலிசமாகாது. அரை வேக்காட்டு சோசலிசவாதிகளுக்கு ஐக்கிய முன்னணியில் இடமில்லை. அவர்களுக்கு 'குட்பை' சொல்லத் தயாராக இருக்கிறோம்!"

—டாக்டர் என். எம். பெரேரா
(இ.தொ. சங்க சம்மேளனக் கூட்டத்தில்.)

"பிரதமர் ஒரு சோசலிசவாதியல்ல; அவர் சோசலிசவாதியாக இருந்திருந்தால் ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்திருக்கமாட்டார்!"

—திருமதி விவியன் குணவர்தன
(பாராளுமன்றத்தில்.)

"We are well accustomed to adversity and to struggle. We have fought with the police and other forces in the past and we will not be afraid to do so again"

— Dr. N. M. PERERA (C. D. N. 16-11-74).

A solitary voice which shouted:- "We must fight back" Mr. Vasudeva Nanayakara shouted back — "you are a Traitor — if you don't obey the leadership"

— incident at Campell park (Sunday Times 17-11-74).

# சம சமாஜிஸ்டுகளின் 'காம்பெல்' புர்..ர்..ரட்சி!

## தலைவரின் போதனையை திருப்பிச் சொன்னவனுக்கு 'துரோகி' பட்டம்!

'ஆகாவென்றெழுந்த' யுகப்புரட்சி, ரஷ்யநாட்டில் பாட்டாளிவர்க்க ஆட்சிக்கு வழிவகுத்தது. ஆனல் பாட்டாளிகளின் கூட்டாளிகள் தாமே என்று சென்ற முப்பதாண்டுகளுக்கு மேலாக முதலைக் கண்ணீர் வடித்துவரும் லங்கா சமசமாஜக் கட்சியினர் சென்ற சனிக்கிழமை (16—11—74) கொழும்பு காம்பெல் பார்க்கில் நடத்திய 'புரட்சி' பொய்யாய்ப் புழுகாய், புனைகதையாய் கனவாய், புஸ்வாணமாகி முடிந்தது கண்டு நாட்டு மக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கின்றனர்!

முப்பதாண்டுகளுக்கு மேலாக 'புரட்சி' பேசிவந்தவர்கள் ஊரடங்குச் சட்டத்தைக் கண்டதும் தமது புரட்சியை ஒரு மூலையில் தூக்கிப் போட்டு விட்டு தப்பினேம் பிழைத்தோம் என்று ஓடோடி வீடுபோய்ச் சேர்ந்தனர். இவர்களது பேச்சைக் கேட்டுக் கேட்டு அதிலே ஊறிபோன அப்பாவியான சமசமாஜி ஒருவர், 'பொலிசாரை எதிர்த்து போராடுவோம்!' என்று இவர்கள் முன்பு கூறியதைதிருப்பிக் கூறியபோது அவரை 'துரோகி' என்று திட்டியிருக்கின்றனர்! இவ்வாருக காம்பெல் பார்க் புரட்சி முடிவில் 'பு......ர்...—ர்......ரட்சியாகி புஸ்வாணமாகியது!

சமசமாஜக் கட்சியின் தொழிற் சங்கமான இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் 16-11-74 சனிக்கிழமை கொழும்பில் தனது ஊர்வலத்தை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. இதற்கு முதல் நாளான 15-11-74 வெள்ளிக்கிழமை இவர்களது வருடாந்த மாநாடு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய சமசமாஜக் கட்சித் தலைவரும் நிதி [illegible]

—4-ம் பக்கம் பார்க்க

# அலிபாபாவும் 40 திருடர்களும்!

## கூட்டுறவுச் சங்க கள்ளர்கள் பற்றி யாழ்நகரில் சுவர்ச் சுலோகங்கள்!

கள்ளர் குகையாக விளங்கி வரும் யாழ். மாநகர கூட்டுறவுக் கடைகள் மீது திடீர்ச் சோதனை மேற்கொண்டு, மோசடிகளை அம்பலத்துக்கு கொண்டு வந்து கூட்டுறவுச் சங்கத்தைப் புனிதப்படுத்துவதற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மேற் கொண்டிருக்கும் துணிகரமான நடவடிக்கைகள் துரோகப் பருக்கு கெடிக்கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக யாழ் பொது மக்கள் பேசிக் கொள்ளுகின்றனர்.

ஏற்கெனவே தன்னைக் கேளாமல் யாழ் அரசாங்க அதிபருக்கு பிரதமர் யாழ் வந்திருந்தபோது பெர்மிட்டுக்கு சீனி வழங்கியதற்காக பொதுமுகாமையாளர் மீது ஆத்திரமடைந்திருந்த துரோகப்பர், அவருக்கு சிட்டுக்கிழித்து, அவரது வயிற்றிலடித்தது தெரிந்ததே.

—5-ம் பக்கம் பார்க்க

## சட்டி சுட்டதடா! கை விட்டதடா!

"நான் கிளிநொச்சித் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கப்போகிறேன் என்று கூறுகிறர்கள். அதுவல்ல எனது நோக்கம்!"

—செ. குமாரசூரியர்
(வீரகேசரி 11-11-74)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகங்களுக்கு மூடுதிரையாக சிலை திறப்பு நாடகமா?

வானுலகில் வள்ளுவர் தலைமையில் தமிழ் சங்கம் கூடுகிறது. புலவர் பெருமக்கள், கவிஞர்கள், தமிழ் மன்னர்கள், தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் அங்கு அமர்ந்திருக்கின்றனர். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தமக்கேயுரிய கணீரென்ற குரலில் இசைக்கிறார். நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

வள்ளுவர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேசத்தொடங்குகிறார்:-

"பெருமதிப்புக்குரிய தமிழ்ச் சங்கச் சான்றோர்களே! உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்! சங்கத்தின் அடுத்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கு முன்னர் ஒரு புதிய உறுப்பினர் இங்கு வந்திருக்கிறார். நமது சங்கத்தில் உறுப்பினராக மெத்த ஆவல் கொண்டுள்ளார். அவர் இப்போது உங்கள் முன்தோன்றுவார்!"

பேரறிஞர் அண்ணா எழுந்து ஒரு சிட்டிகைப் பொடியை உறிஞ்சி முகத்தை மேல் துண்டினால் துடைத்து விட்டுக்கொண்டு, டாக்டர் மு. வ. வைக் கட்டித் தழுவி வாஞ்சையுடன் வரவேற்கிறார். அண்ணாவைத் தொடர்ந்து அனைவரும் டாக்டர் மு. வ.வை ஆரத் தழுவி வரவேற்கின்றனர்.

பெற்றுவரும் கொடுமைகளையும் அங்கு என் மக்கள் சிங்கள ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்களால் அடைந்து வரும் அல்லல்களையும்கேட்டு கேட்டுகொதிப்படைந்திருக்கிறது என் உள்ளம். சென்ற ஆனித்திங்கள் ஐந்தாம் நாள் இனத்துரோகிகளை எதிர்த்து வீரத்துடன் போராடிவிட்டு கடைசியாக இங்கு வந்து சேர்ந்துவிட்ட என் தம்பி சிவகுமாரன் கூறிய நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகளைக் கேட்டு நெட்டுயிர்த்துப் போயிருக்கிறேன் நான்! ஆனால் என் வீரத்தம்பி சிவகுமாரன் இங்கு வந்த பின்னர் அங்கு எட்டப்பர்கள் கிறானே கரக்கை வன்னியன் என்ற ஒரு துரோகி—அவன் வழியில் தப்பாமல் வந்த துரோகப்பன் ஒருவன், தன் கறைபடிந்த கைகளினால் எனக்குச் சிலை வைக்கிறானாம் — நான் கொடியும் கொற்றமும் வைத்து ஆண்டிருந்த நல்லூரில்! சீச்சீ— அந்தத் துரோகிகளின் கொட்டம் அடக்கிட நான் அங்கு இல்லையே என்றுதான் குமுறுகிறேன்!'

சிலம்புதந்தஇளங்கோவடிகள் எழுகிறார்—'இரவுமுழுவதும் உடல் விற்கும் கணிகையொருத்தி பத்தினித்தெய்வம் கண்ணகிக்கு சிலை டிக்கொடுக்கப்பட்டான்! இன்று ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு கொடியின் கீழ்—நாம் அன்று அந்நியனுக்கு பறிகொடுத்த சுதந்திர ஈழத்தமிழ் நாட்டை மீட்டிட சிங்கள ஏகாதிபத்தியத்துடன் போராடிவருகின்றனர். தமிழ் ஈழ மண்ணின் விடுதலைக்காக வீரத்துடன் போராடிய எத்தனையோ தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசின் சிறைகளில் இன்று அல்லற்படுகின்றனர். எத்தனையோ இளைஞர்கள் இன்றைக்கு அங்கே பாசறைகள் அமைத்து விடுதலை போருக்கு கருவிகள் சேர்த்து வருகின்ற

## வானுலகத் தமிழ் சங்கத்தில் சங்கிலியன் கண்டன முழக்கம்!

வள்ளுவர் இப்படிக் கூறி வாய் மூடுவதற்கு முன்னர் தமிழே வடிவானநெடிதுயர்ந்த மெலிந்த அந்த உருவம் அங்கே தோன்றி அனைவர்க்கும் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கிறது.

"ஆ... நம்முடைய டாக்டர் மு. வ. அவர்கள் அல்லவா? அவர் எப்போது இங்கே வந்தார்? அவரும் இங்குவந்துவிட்டால், இனிப் பூலோகத்தில் தமிழின் கதி என்ன ஆவது!" —இவ்வாறு அனைவரும் அங்கலாய்க்கின்றனர்.

இதன் பின்னர் சங்கத்தின் ஏனைய அலுவல்கள் தொடங்குகின்றன. இனி உறுப்பினர்கள் தங்கள் பிரச்சினைகளை சபையில் தெரிவிக்கலாம் என்கிறார் வள்ளுவர்.

தமிழ் ஈழத்தை ஆண்டிருந்த கடைசித் தமிழ் மன்னன் மாவீரன் சங்கிலியன் கோபத்தினால் மீசை துடிதுடிக்க ஆசனத்திலிருந்து எழுகிறான்!

"வள்ளுவரே! வணக்கம்!! சங்க உறுப்பினர்களே! என் ஆருயிர் நண்பர்களே! எங்கள் தமிழ் ஈழத்தில் நடை கொட்டமடித்துக் குதியாய்க் குதிக்கிறார்களாம்—கடைசியாக அங்கிருந்து வந்த செய்தியை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை..." இவ்வாறு கூறிவிட்டு நிறுத்தினான் சங்கிலியன்!

"தங்கள் உள்ளத்தை எரிமலையாக்கிய அந்தச் செய்தியாதென்பதை நாங்கள் அறியலாமோ? என்று பாரதிதாசன் கேட்கவே, சங்கிலியன் தொடருகிறான்!

'ஆம் கவிஞரே—என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டு இன்று நரகத்தில் உழல் யெடுத்த கதைபோல் அல்லவா இருக்கிறது இது...?'

"உண்மைதான் இளங்கோ அடிகளே! அந்நிய ஏகாதிபத்தியத்தினின்றும் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தைக் காத்திட நான் அன்று போராடினேன். என் வாளின் சக்தியால் பல தலைகளை உருட்டினேன். இறுதியில் காட்டிக்கொடுக்கப்பட்டேன் என் இனத்தில் பிறந்த ஒருவனால்! எனக்குப் பின் என் தம்பி பண்டார வன்னியனும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்து துரோகியொருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டா னர். இந்த தமிழ் ஈழ விடுதலை அணியினரை—எனது இலட்சியச் கனவை நிறைவேற்றத்துடிப்பவர்களை—முதுகில் குத்தி சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு காட்டிக்கொடுத்து வயிறு கழுவி வரும் ஈனத் துரோகிதான் துரோகப்பன்! (இவ்வாறு சங்கிலியன் கூறிக்கொண்டிருக்கும் போது சீச்சீ... நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று பாரதியின் வாய் முணுமுணுக்கிறது) அத்தகைய துரோகிதான் தன் பாவக்கரங்களினால் எனக்கு சிலை வைத்து தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறான்!"

இவ்வாறு கூறிய போது சங்கிலிமன்னனின் துள்ளு மீசை துடிதுடித்தது!

"ஹ ஹ் ஹா, நல்ல கதையாக இருக்கிறது இது—எட்டப்பன் எனக்குச் சிலை வைத்தது போல!" என்று சிரிக்கிறான் வீரபாண்டிய கட்டபொம்மன்!

வள்ளுவர் ஏதோ பேசுவதற்கு எழுகிறார் — எல்லோரும் அமைதியாக இருக்கின்றனர்!

"தம்பி சங்கிலியனின் உணர்ச்சிமிகு பேச்சைக் கேட்டேன். அவனது வேதனை நியாயமானதே. ஏனெனில் சங்கிலியனுக்கு இன்று ஏற்பட்டுள்ளவேதனை எனக்கு எப்போதோ ஏற்பட்டுவிட்டது. தம்பி சங்கிலியனை மட்டுமா அந்தக் கயவன் தன் அரசியல் வியாபாரத்துககு பயன்படுத்துகிறான்? யாழ் நகர வீதிகளில் எனக்குக்கூட தன்பாவக் கரங்களினால் சிலை வைத்தானாம்! தன்கையால் சிலை வைத்து என் மானத்தை தமிழ் மானத்தை விலை கூறி விற்கும் அந்த பாவி மனிதன் வாங்குகிறான்! தமிழ் இனத்தை தான் விலை கூறி விற்பதை எங்கள் சிலைகளைக் காட்டி மூடி மறைக்கப் பார்க்கிறான் அந்த முட்டாள்!'

### தமிழீழதாசன்

இவ்வாறு வள்ளுவர் கூறி வாய் மூடுவதற்கு முன் ஔவை மூதாட்டி எழுந்தார்!

"மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று மிதியாமை கோடி பெறும்" என்றேன் நான்! சிங்கள ஏகாதிபத்தியத்தின் எச்சில் இலையை நக்கி தமிழ்மானம் விற்றுவரும் அத்துரோகி எனக்கும் சிலை வைப்பதாக நாடகமாடி என்னையும் அவமதிக்கிறான்! மகாத்மா காந்திக்கு சோமசுந்தரப்புலவருக்கு, ஆனந்தக்குமாரசாமிக்கு என்றெல்லாம் சிலை வைப்பதாக கூறி (சிமெண்டில்) செய்த 'கொலுப்

—6-ம் பக்கம் பார்க்க

## மு. வ. வை அவமதிக்கும் மூடர்கள்!

**இலக்கிய உலகு**

-"வேதாளம்"-

டாக்டர் மு. வ. என்றதும் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதுப கையெடுத்து வணங்குகிறது. டாக்டர் மு. வ. முத்தமிழுக்கு செய்த தொண்டு ஈடிணையற்றது; அளப்பரியது. இந்த அறிஞரின் மறைவு குறித்து தமிழன்னை இன்னும் கண்ணீர் வடித்துக்கொண்டேயிருக்கிறாள்; தமிழுலகம் அழுது அரற்றிக்கொண்டேயிருக்கிறது.

ஆனால் ஈழத்திலோ ஒரு சில இழிபிறவிகள் தமக்கு டாக்டர் மு. வ. என்றால் யாரென்றே தெரியாது என்றும் இந்தியரான டாக்டர் மு. வ. வுக்கு எதற்காக ஈழத் தமிழர்கள் இரங்கற் செய்தி அனுப்பவேண்டுமென்றும் கேட்டுநாய்போல் குலைத்துள்ளனவாம்!

தமிழினத்தின் தனித்துவத்தையே சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு பலியாக்க வேண்டுமென்ற கொள்கையுடைய இந்த துரோகிகளுக்கு டாக்டர் மு. வ. என்றால் யார் என்று தெரியாமல் இருப்பது பற்றி நாம் ஆச்சரியமடையவில்லை ஆனால் முத்தமிழின் பேரால் கழகங்கள் வைத்து ஊரை ஏமாற்றும் இவர்கள் நாத்தடிப்புடன் முத்தமிழ் வித்தகரான டாக்டர் மு. வ. வை 'இந்தியர்' என்று முத்திரையிட்டு துவேஷ மனப்பான்மையுடன் ஒதுக்கித்தள்ளி இருப்பதை நாம் மன்னித்து விட முடியாது!

அண்மையில் முத்தமிழின் பேரால் கழகம் அமைத்து ஊரை ஏமாற்றிவரும் இந்த எத்தர் கூட்டத்தில், டாக்டர் மு. வ. மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற பிரேரணையொன்று கொண்டுவரப்பட்ட போது அதன் தலைவரும் செயலாளரும் அதைக்கடுமையாக எதிர்த்து நிராகரித்து விட்டார்களாம். அதற்கு இவர்கள் கூறிய காரணங்கள் என்ன தெரியுமா?

(1) இந்தியநாட்டு அறிஞருக்கு இப்படியொரு இரங்கல் செய்தி அனுப்புவது அவசியமில்லை!

(2) அவர் யார் என்பது எமக்குத்தெரியாது.

(3) அப்படி அனுப்பினால் இலங்கை அரசின் கண்காணிப்பை கசப்புடன் பெற வேண்டியவர்களாவோம்.

(4) ஈழத்து அறிஞர்களை, பேணுவதும் போற்றுவதும் மட்டுமே கழகத்தின் கடமை!

இவைதானாம் இவர்கள் தெரிவித்த காரணங்கள்; இவ்வாறு திமிருடன் முத்தமிழ் வேந்தர் அமரர் டாக்டர் மு. வ. வை எடுத்து எறிந்து ஏளனம் செய்திருக்கும் இந்த சின்னமனிதர்களுக்கு, முத்தமிழின் பேரால் கழகம் வைத்திருப்பதற்கு என்ன அருகதை உண்டு!

இந்திய அறிஞர்களுக்கும், இந்திய தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் எதிராக எப்போதும் துவேஷ வாந்தி எடுத்துவரும் கம்யூனிஸ்டுகளே டாக்டர் மு. வ. அவர்கள் விஷயத்தில் 'கப்சிப்' என்று இருக்கும் போது, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையில் தங்கள் சரக்கு வேகவில்லையென்பதைக் கண்டு அதிலிருந்து விரக்தியடைந்து வெளியேறிய புலுடாப் பேர்வழிகள் தமிழுக்காகவே வாழ்ந்த டாக்டர் மு. வ. வை இப்படி அவமதிக்கிறார்கள் என்றால் ஈழத் தமிழ் மகனே! உனக்கு எப்போதாவது விடிவு ஏற்படுமா?

டாக்டர் மு. வ. 'இந்தியர்' என்றால்—கம்பனும் வள்ளுவனும், இளங்கோவும் பாரதியும் பாரதிதாசனும் ஏனைய பழம் பெரும் புலவர்கள் அனைவரும் 'இந்தியர்கள்' தானே! நால்வர் பெருமக்கள் போன்ற சமயத் தலைவர்களும் 'இந்தியர்கள்' தானே! இவர்கள் எல்லோரையும்—இவர்கள் எழுதிய 'இலக்கியங்கள்' தேவார திருவாசகங்கள் முதலிய அனைத்து நூல்களையும்—புறக்கணிக்க வேண்டுமென்றும் நாளை இந்த முட்டாள்கள் கூறவும் கூறும்!

ஏன் தெரியுமா? அப்போதுதான் சிங்கள எசமானர்கள் மனம் மகிழும்! அவர்களை மனம் மகிழச் செய்தால்தான் இவர்களுக்கு எலும்புத்துண்டுகள் விழும்!

இப்படிப்பட்டவர்களும் தமிழ் ஈழத்தில் பிறந்திருப்பது தமிழினம் செய்த பாவம்!

இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் பாரதி பாடினான்:—

"நாயும் பிழைக்கும்
இந்தப் பிழைப்பு..."

## கல்லாநிதி சிங்களத் தம்பியை உண்மை சுட்டது!

கொழும்பில் அண்மையில் பிரபல கல்லூரியொன்றின் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலைவிழாவொன்றை நடத்தினர். இக்கலைவிழாவில் அனைவரையும் கவர்ந்த அம்சம், அங்கு இடம் பெற்ற ஒரு கதாகாலட்சேபம் ஆகும்.

"நவீன எட்டப்பர்கள்" எனும் தலைப்பில் இடம் பெற்ற இக்கதா காலட்சேபம், தமிழ் இனத்தைக் காட்டிக்கொடுத்து, துரோகம் புரிந்துவரும் தமிழ்ப் பகைவர்களுக்கு சரியான சாட்டையடியாக அமைந்து தமிழ் மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைத் தட்டிக்கொண்டது.

அக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஆளுங்கட்சியின் எடுபிடியும், எட்டப்பர் திருக்கூட்டத்தில் ஒருவருமான சிங்களத் தம்பிக்கும் இது சரியாக சுட்டிருக்க வேண்டும்! சோசலிசம் பேசும் இந்த முற்போக்குக் கல்லாநிதி, கதாகாலட்சேபத்தின் சூடு பொறுக்காமல் கதாகாலட்சேபத்திற்கு பொறுப்பான மாணவர் மீது நடவடிக்கையெடுக்கும் படி குறித்த கல்லூரி அதிபருக்கு 'சிபார்சு' செய்தாராம்! சிங்களத் தம்பியின் சின்னத்தனத்தினால் அந்த மாணவருக்கு கல்லூரியில் சீட்டுக் கிழிக்கப்பட்டது!

ஆனால் ஒரு கதவு மூடப்பட்டால் ஒன்பது கதவு திறக்கும் அல்லவா? சிங்களத்தம்பியால் வஞ்சிக்கப்பட்ட மாணவனுக்கு வேறு கல்லூரியில் இடம்கிடைத்து விட்டது! சிங்களத் தம்பியின் சுயநலச் சுயரூபமும் இதன் மூலம் அம்பலமாகி விட்டது!!

## நாவல் போட்டி முடிவு திகதி 31-3-74

ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவையின் அனைத்துலக நாவல் போட்டியின் முடிவு திகதி 31-3-75 வரை பின் போடப்பட்டுள்ளது. பல எழுத்தாளர்களும் கோரிக்கை விடுத்ததன் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி பேரவையின் இணைச் செயலாளர் அறிவித்துள்ளார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனவரியில் சட்ட மறுப்பு இயக்கம் தமிழர் கூட்டணி ஆரம்பிக்கும்!

## தேசியப் அரசப் பேரவையில் பண்டிதர் இரத்தினம் அறிவிப்பு!



**சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையை முன் வைத்து தமிழர் கூட்டணி எதிர்வரும் சனவரி முதல் வாரத்தில் சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கவிருப்பதை தேசிய அரசுப் பேரவையில் ஆட்சியாளருக்கு காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பகிரங்கமாக அறிவித்தார்!**

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசிய பண்டிதர் இரத்தினம் இது சம்பந்தமாகக் குறிப்பிட்டதாவது:-

மக்களுடைய இறைமையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது நான் இங்கே யாழ்ப்பாணப பகுதியிலே இரண்டு ஆண்டுகாலமாக உரிமை மறுக்கப்பட்டிருக்கின்ற காங்கேசன்துறை மக்களைப் பற்றிக்கூறவேண்டும். இந்த அரசாங்கம் உண்மையில் புதிய அரசியலமைப்பிலே மக்களுடைய இறைமைக்கு முக்கிய இடம் கொடுத்திருக்கிற தென்றால் எதற்காக 40,000 வாக்காளர்களைக் கொண்ட காங்கேசன் துறைத் தொகுதியிலே அந்த 40,000 மக்களுடைய இறைமை மறுக்கப்பட்டிருக்கிறது? எனவே, நீங்கள் மக்களுடைய இறைமை என்று சொல்வதெல்லாம் வெறும் தந்திரோபாயமே ஒழிய உண்மையிலே இந்த அரசாங்கம் மக்களுக்கு இறைமை கொடுக்க விரும்பினால் காங்கேசன்துறைத்தேர்தலை உடனடியாக நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அத்தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை.

சில நாட்களுக்கு முன்னர் முதலமைச்சரவர்கள் முதன் முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்கள். காங்கேசன் துறைத்தேர்தலை மிக விரைவிலே நடத்துவோம் என்று அங்கே அவர் கூறினார். அதை அவர் அங்கு பகிரங்கமாகக் கூறினார். முதலமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபடியால் காங்கேசன் துறைத்தேர்தல் நடைபெறப் போகிறதென்று அவருடைய ஆதரவாளர்கள் ஆர்ப்பரித்தார்கள். இன்னும் அத்தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கலாவேவ இடைத்தேர்தல் நடக்கின்றது. அதனோடு இத்தேர்தலும் நடக்கும் என்று எதிர்பார்த்தோம். நடக்கவில்லை. இப்பொழுது, இவ்விடைத் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம்தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இத்தேர்தலைப் பூச்சாண்டியாக வைத்துக்கொண்டு அநியாயமான முறையிலே தடுப்புக் காவலிலே வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்காமல் தடுப்பதற்கே அரசாங்கம் இக் காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டுக்கொண்டு வருகிறதென்ற குற்றச் சாட்டை நாங்கள் இங்கே சுமத்துகின்றோம்.

எங்களுக்குத் தேர்தல் பெரிதல்ல. எங்கள் உரிமைகள்தான் பெரிது. நாங்கள் தேர்தலைப் பொருட்படுத்தவில்லை.

இந்த நிலையிலே, அடைக்கப்பட்டிருக்கின்ற பலதமிழ் இளைஞர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும், அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் அப்படிச் செய்யத் தவறினால், அடுத்த ஜனவரிமாதம் முதல்கிழமை நாங்கள் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்த முடிவுசெய்துள்ளோம் என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கரத்தின: உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

திரு. இரத்தினம்:- சட்டமறுப்பு இயக்கம் எங்களுக்குப் புதிதல்ல. நாங்கள் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தியவர்கள் என்பதை அமைச்சரவர்கள் மறந்துவிடக்கூடாது.

சட்டமறுப்பு இயக்கம் எப்படியிருக்கும் என்பதை அவர்கள் இருந்து பார்க்கட்டும். ஜனநாயக நாட்டிலே முறையான சட்டமறுப்பு இயக்கம் எதிர்க்கட்சியின் ஒருதனி உரிமையாகும்.

அங்கு முதலமைச்சர் அவர்கள் வந்தபொழுது ஒரு நாடகம் ஆடப்பட்டது. அங்கே உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் யாழ்ப்பாண மேயருமான திருவாளர் துரையப்பா முதலமைச்சர் அவர்களுக்கு ஒருமனுவைச்சமர்ப்பித்தார்.

தடுப்புக் காவலிலே வைக்கப்பட்டிருக்கும் ஒன்பது, பத்து இளைஞர்களின் பெற்றோர்கள் சார்பாக அந்த மனு கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. அதனைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் கூறினர். ஆனல், அது இன்னும் நடக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. இதனாலே தான் அவர்களை விடுவிக்குமாறு சொல்கிறோம்.

அவர்கள் மீது குற்றம் இருந்தால் தண்டியுங்கள். குற்றம் இல்லாவிட்டால் அவர்களை விடுதலை செய்யுங்கள். அவர்களை மன்னியுங்கள் என்று நாம் கேட்கவில்லை.

அவர்கள் குற்றம் செய்திருந்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளாக அவர்களைச் சிறையில் அடைத்துவைத்துச் சித்திரவதை செய்யாமல் வழக்கு வைத்துத் தண்டனை கொடுங்கள் என்று தான் கேட்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கட்டுபெத்தை வளாகத்தில் வெடிகுண்டு வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் பற்றி இந்தச் சபையிலே கேள்வி எழுப்பப்பட்ட பொழுது அதற்குமறுமொழி கூறிய பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் கூறியமறுமொழியைக் குறிப்பிடவேண்டும். அதற்கு மறுமொழி கூறிய பிரதி அமைச்சர் அந்த இளைஞர்களைப் பிணையில்விடுவிக்க எதுவிததடையுமில்லை என்று கூறினர். சிங்கள இளைஞர்கள் வெடிகுண்டு வைத்தார்கள் என்று சந்தேகப்பட்டால் அவர்களைப் பிணையில் விடலாம்; ஆனல், துண்டுப் பிரசுரங்கள் கொடுத்ததற்காக, சுவர்களில் சுலோகங்கள் எழுதியதற்காகக் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை இதுவரை காலமும் தடுப்புக் காவலில் வைத்திருப்பது சமதர்மமா, நியாயமா என்று கேட்க விரும்புகின்றேன்.

இந்த இளைஞர்களை இன்னும் தடுப்புக் காவலில் வைத்திருப்பது நீதிக்குட்பட்டதலவென்றும் அவர்களைத் தொடர்ந்தும் இவ்விதம் வைத்திருப்பது தமிழர்களின் தன்மானத்துக்கும் சுயமரியாதை உணர்ச்சிக்கும் சவால் விடுவதாக இருக்கும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

மனித உணர்ச்சி எல்லோருக்குமே ஒன்றுதான். தன்னுடைய பிள்ளையை நேசிப்பது எல்லா மனிதனுக்கும் இயற்கை. தம்முடைய மொழியை நேசிப்பதில் சிங்கள மக்களுக்கும் ஒரே உணர்ச்சிதான், தமிழ் மக்களுக்கும் ஒரே உணர்ச்சி தான், சில மக்களுக்கும் ஒரே உணர்ச்சிதான். அதை எல்லாம் விட்டுவிட்டுத் தாய்மொழி உரிமை வேண்டாம்; எங்களுக்கு ஆளுகின்ற உரிமை வேண்டாம்; பிரதேச உரிமை வேண்டாம் என்று யாரேனும் கூறுவார்களானல் அவர்கள் மனித உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டவர்களல்லர்; அவர்கள் இன விரோதிகள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

சிலர் தங்கள் சொந்த நலனுக்காக—நீங்கள் கொடுக்கின்ற சில சலுகைகளைப் பெறுவதற்காக உங்களுடன் சேர்ந்து இருக்கிறார்கள், இதனாலே தமிழ் இனத்தை நாங்கள் அடக்கிவிட்டோம் என்று எண்ணுகிறீர்கள்.

தாய்மொழிப் பற்று மனிதனுக்கு இருக்கின்ற இயற்கையான உணர்ச்சியாகும். தங்கள் அலுவல்களைத் தாங்களே பங்குபற்றிச் செய்ய வேண்டும்—தங்கள் மொழியிலேயே செய்ய வேண்டும்; தங்களுடைய கலை, கலாச்சாரத்தைப் பேண வேண்டுமென்ற ஒரு கொள்கை எல்லா மனிதர்களுக்கும் இருக்கிறது. இந்தக் கொள்கையை நிலைநாட்டுவதற்காகத்தான் நாங்கள் போராடுகிறோமே யொழிய நாங்கள் எங்களுடைய நன்மை கருதிப் போராடவில்லை!

நாங்களும்நல்லாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் இப்பொழுதே சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலே போய் சேரலாம். ஏன், முன்பெல்லாம் ஐக்கிய தேசியக்கட்சி எங்களுக்கு மூன்று அமைச்சர் பதவிகளைத் தருகிறோம்; இன்னும் வேண்டுமென்றால் கூடவும் தருகிறோம் என்று சொன்ன காலமுண்டு. நாங்கள் விரும்பினால் இன்றைக்கே சேர்ந்து நன்மை பெற முடியும்.

ஆனல் இனத்தை விற்கின்ற பரம்பரையிலே நாங்கள் வரவில்லை. ஒருபொழுதும் வரவும் மாட்டோம். தமிழ் இனத்திலே அப்படி ஒரு சிலர் வந்தால் மானங்கெட்ட வயிற்றுப் பிழைப்புக்காக வருகின்ற அடிவருடிகளை வைத்துக்கொண்டு தமிழ் மக்களை அளக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நான் உணர்ச்சியோடும் உறுதியோடும் தான் இங்கே பேசுகின்றேன். எப்படி சிறீலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளைக் கொண்ட கட்சியாக இருக்கிறதோ அதேபோன்று தமிழ் மக்களின்பெரும்பான்மையான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட கட்சியாக தமிழர் கூட்டணி இன்று விளங்குகிறது. சிங்கள மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சிதான் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஏன்! உங்கள் கட்சியைச் சேர்ந்த தொகையான பிரதிநிதிகளை சிங்கள மக்கள் அனுப்பியிருக்கின்றார்கள். அதுதான் அளவு கோல்.

அதுபோல தமிழ் மக்களின் பிரதான கட்சி தமிழர் கூட்டணிதான் என்பதை நீங்கள் ஏற்காவிட்டால் நீங்களே உங்களைத் தாழ்த்துகிறீர்கள். உங்களுக்கு ஓர் அளவுகோல் எங்களுக்கு ஓர் அளவுகோல் என்று வைத்திருப்பது எந்த முறையிலும் மனிதாபிமானமாகாது.

எங்களுடைய அளவுகோலின்படி அளந்துபார்த்தால் இன்று தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்துகின்ற கட்சி நாங்களே என்பதையும் எங்களுடன்தான் நீங்கள் பேசவேண்டுமென்பதையும் நான் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

முதலமைச்சர் நினைத்தால் 24 மணி நேரத்தில் மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும். சிங்கள மொழிக்கு எந்த விதமான இடையூறும் இல்லாமல் சிங்கள மக்களின் உணர்ச்சியை எந்தவிதத்திலும் பாதிக்காமல் 24 மணி நேரத்தில் இந்த தமிழ் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

சாட்டுக்குச் சில சுற்றறிக்கைகளை விட்டுக்கொண்டு துரோகிகளைக் கையாள்களாக வைத்துக் கொண்டு தமிழர்களுடைய உரிமைகளைக் கொடுத்துவிட்டோம் என்று பேசுவதால் பயன் எதுவும் விளையப்போவதில்லை. தமிழருடைய உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்தலாம் என்று நீங்கள் எண்ணினல் பகல் கனவு காணுகிறீர்கள் என்றுதான் கூறவேண்டும்.

எங்களுடைய உரிமைகள் கிடைக்கும் என்றால் உங்களுடைய சோசலிச சமுதாயத்தைக் காணும் முயற்சியில் நாங்கள் உங்களோடு தோளோடு தோள் நின்று போராட எப்பொழுதும் தயாராக இருக்கிறோம் என்று கூறவிரும்புகிறேன். எங்களுடைய உரிமைகளை முதலில் நீங்கள் தரவேண்டும். அதன் பின்னர் உங்களோடு சேர்ந்து போராட நாங்கள் என்றும் ஆயத்தமாக இருக்கிறோம்.

நாங்கள் எங்களுடைய உரிமைப் போராட்டத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் கைவிட மாட்டோம். நீங்கள் எங்களைப் பலவீனப்படுத்தலாம். நல்லிணக்கச் சபை[illegible] நீங்கள் சிலருக்குப் பதவிகளைக் கொடுக்கலாம். சிலருக்கு

—5-ம் பக்கம் பார்க்க

# அழகர் நாமம் பல்லாண்டு வாழ்க!



மன்னாரின் நன்முத்தாய்—மாசில்லா மாணிக்கமாய் — மாதோட்டத்தின் மரகதமாய்—மறத் தமிழர் விடுதலைப் படையின் முன்னோடும் மூத்த தளபதியாய் —தந்தை செல்வாவின் விசுவாச மிக்க ஊழியராய் — மன்னார்த்தொகுதி மக்களின் மனங்கவர்ந்த தலைவனாய் 18 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக விளங்கி வழி காட்டிய அமரர் வீ. ஏ. அழகக்கோன் அவர்கள் மறைந்த முதலாவது ஆண்டு நினைவு தினம் 25-11-74 ஆகும். அத்தூய தலைவனை தமிழினம் எண்ணிப் பார்த்து— அவன் நடந்துவந்த விடுதலைப்பாதையில் தொடர்ந்து நடைபோட்டு 'தமிழ் ஈழத்தை' கண்டிட தளராது உழைக்க உறுதியேற்குமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நவீன பஸ்மாசுரர்கள்!

பஸ்மாசுரன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் சிவபெருமானை நினைத்து நீண்ட காலம் தவம் புரிந்தான். அவனது கடுந்தவம் கண்டு உள்ளம் இளகிய இறைவன், அவனுக்கு முன்னே தோன்றி, வேண்டிய வரத்தைக் கேட்கும்படி கூறினன். அபபொழுது பஸ்மாசுரன் கேட்ட வரம் என்ன தெரியுமா? தான் யாருடைய தலையில் கைவைத்தாலும், அவன் எரிந்து சாம்பலாகவேண்டும் என்று வரம் கேட்டானும். இறைவனும் அவ்வாறே வரம் கொடுத்தான்.

இப்போது பஸ்மாசுரனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. சிவபிரான் கொடுத்தவரம் பலிக்குமா என்று பரிசோதிக்க விரும்பினன். நீட்டிய மரத்திலே கூர்பார்ப்பதுபோல— சிவபிரானின் தலைமீதே கைவைத்துப்பார்க்க எண்ணினன். அசுரனின் கெட்ட — துரோகத்தனமான எண்ணத்தைப் புரிந்துகொண்ட இறைவன் தந்திரோபாயம் ஒன்றை மேற்கொண்டானும். உடனே நடனம் ஆடத்தொடங்கினனும். இறைவனின் நடனத்துக்கு போட்டியாக பஸ்மாசுரனும் நடனம் ஆடத் தொடங்கினன். ஆட்டத்தின் மத்தியில் இறைவன் தன்தலைமீது தனதுகையையே வைத்து ஆடினனும். ஆட்டத்தில் தன்னை மறந்திருந்த பஸ்மாசுரனும்—தான் பெற்ற வரத்தை மறந்து—தன் தலைமீதே கைவைத்து ஆடி, எரிந்து சாம்பராகிப்போனன்!

இப்படியொரு புராணக் கதையுண்டு!

ஆளும் ஐக்கிய முன்னணியிலுள்ள அரசியற் கட்சிகளுக்கிடையே தோன்றியுள்ள அதிகாரப் போட்டியும்—யாரை யார் பிடித்து விழுங்குவது என்பதில் அவை மேற்கொண்டிருக்கும் தந்திரோபாயங்களும் — நமக்கு மேற்கண்ட பஸ்மாசுரன் கதையைத்தான் நினைவுக்கு கொண்டு வருகின்றது.

ஆளும் ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளும் 'மக்கள்' என்ற ஆண்டவனை நோக்கித் தவம் புரிந்தன. இந்த முக்கூட்டு முன்னணியின் போலித்தனமான தவத்தினல் எடுபட்ட இந்நாட்டு மக்கள் 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது—மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் கூடிய அதிகாரம் எனும் வரத்தை முன்பின் யோசனையின்றிக் கொடுத்துவிட்டனர்!

இந்நாட்டு மக்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய அதிகாரம் எனும் வரத்தை பெற்றுக்கொண்ட ஐக்கிய முன்னணியினர் — வரத்தைத் தந்த பொது மக்களின் தலை மீதே வைக்க ஆரம்பித்தனர்!

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது! அச்சட்டத்தின் கீழ் மக்களின் ஜனநாயக, அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் கருத்துக்கு—ஐக்கிய முன்னணியின் கருத்துக்கு எதிரானவர்கள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நீதிவிசாரணை ஏதுமின்றி சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

எதிர்க்கட்சிக் கூட்டங்களுக்குத் தடை! எதிர்க்கட்சி பத்திரிகைகளுக்குத் தடை! எதிர்க்கருத்துக்களுக்கு வாய்ப்பூட்டு! சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது!

நள்ளிரவு 'கெசட்'டுக்கள் மூலம் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் ஞெக்கட்டையும் விட கடுமையான வேகத்தில் உயர்த்தப்பட்டுள்ளன.

வாழவும் முடியாமல்—சாகவும் முடியாமல் இந்நாட்டு மக்கள் வேதனையின் விளிம்புக்கு தள்ளப்பட்டு இன்றைக்கு கண்ணீர் வடித்த படி இருக்கின்றனர்!

இவ்வாறு மக்களிடம் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தி வந்த ஐக்கிய முன்னணியினர்—இன்றுதங்களுக்கிடையிலேயே ஒருவர் தலை மீது மற்றவர் கைவைக்கத்தொடங்கிவிட்டனர்!

இந்நாட்டு ஏழை மக்களும் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் தமிழினத்தாரும் வடிக்கின்ற கண்ணீர் கூரிய வாளாகி சர்வாதிகார வெறிபிடித்த அரசை அறுக்கத்தொடங்கிவிட்டது!

அரசாங்கத்திலிருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், லங்கா சமசமாஜக் கட்சியினருக்குமிடையே இன்றைக்கு மூண்டுள்ள பகையும், அதிகாரப்போட்டியும் பஸ்மாசுரன் கதையையே நமக்கு நினைவுக்கு கொண்டுவருகிறது.

எதிர்க்கட்சியினரையும், விடுதலை எழுச்சி கொண்டுள்ள இந்நாட்டுத் தமிழ்தேசிய இனத்தையும் நசுக்குவதற்கு இதுவரை காலமும் பயன்படுத்தப் பட்டு வந்த அவசரகால சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் இன்று தங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் நசுக்குவதற்கு ஆளுங் கட்சிகள் பயன்படுத்த ஆரம்பித்து விட்டன!

சமசமாஜிகளுக்கு எதிராக சுதந்திரக் கட்சியினர் ஊரடங்குச் சட்டத்தை ஏவி, அவர்களது ஊர்வலத்தை நசுக்கிவிட்டார்கள்!

நவீன பஸ்மாசூரர்களின் ஆதிக்கப்போட்டி தொடங்கிவிட்டது! இவர்கள் தங்கள் தலைகளில் தாங்களே கைவைத்து எரிந்து சாம்பலாகும் அந்த நன்னாளைத்தான் தமிழ் மக்கள் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர்!

## சமசமாஜிஸ்டுகளின் 'காம்பெல்' புர்.....ர்....ரட்சி!

—1-ம் பக்கத் தொடர்

என். எம் பெரேரா தேசிய மயக்கொள்கைக்கு எதிரானவர்களை (சிறீலங்கா சுதந்திரக்கட்சியினரை) கடுமையாகத் தாக்கினர்.

பூரணமாக தேசியமயக் கொள்கையை அமுல்படுத்தாதவரை சோசலிச இலட்யத்தையடைய' முடியாதென்றும் சோசலிசப் பயணத்தில் தங்கு மடத்துக்கு இடமில்லையென்றும் முற்போக்கு பாதையில் முன்னேறி சோசலிசக்கொள்கையை அமுல்படுத்த விரும்பாதவர்களுக்கு பிரியாவிடை அளித்து விட்டு தாங்கள் சோசலிசப் பாதையில் முன்னேறத் தயாராக இருப்பதாக அவர் மேலும் அறைகூவல்விடுத்தார்.

"We are well accustomed to adversity and to struggle. We have fought with the police and other forces in the past and we will not be affraid to do so again"

—(C. D. N. 16-11-74)

'துன்பங்களையும்போராட்டங்களையும் சந்தித்துப்பழக்கப் பட்டவர்கள் நாங்கள். நாங்கள் பொலிசாருடனும் ஏனைய படைகளுடனும் முன்பு சண்டைபோட்டிருக்

களுடன் கூடினர்கள். செங்கொடிகள் அவர்கள் கைகளில் காணப்பட்டன! ஆவேசமுழக்கங்கள் அவர்களது வாய்களிலிருந்து புறப்பட்டுக்கொண்டிருந்தன.

"புரட்சியொன்று எதிரே வருகிறது!"

"நாங்கள்போறதுலெனின் வழி!"

"இந்தக்காலத்து இளைஞர்கள் பொல்லாதவர்கள். கையை (சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் சின்னம்) தூக்கினல் சண்டப் பிரசண்டம் தான்!"

என்பன போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை அவர்கள் வைத்திருந்தனர்.

இந்நேரத்தில் சமசமாஜிகளின் வாலிபர் தலைவரான கிரியெல்லை பா. உ. திரு. வாசுதேவநாணயக்கார எங்கிருந்தோ அங்குவந்துசேர்ந்தார். தங்கள் 'தளபதி'யைக் கண்டதும், ஊர்வலத்துக்கு வந்திருந்த தொழிலாளர்கள் ஜெயகோஷம் எழுப்பி அணிவகுப்புக்குத் தயாராஞர்கள்!

### வாசுதேவ வந்தார்

"சற்றுப்பொறுங்கள்...! உங்களுக்கு ஒரு விஷயம்

நன்கு இனம் கண்டு கொண்டார்கள்!

### சுயரூபம் அம்பலம்!

ஊரடங்கு சட்டத்தை அன்று அவர்கள் மீறியிருக்கவேண்டும் என்பதல்ல நமது வாதம். ஆனுல் தம்மை விராதி விரர்கள் போலக்காட்டி தொழிலாள வர்க்கத்தை பகடைக் காய்களாக்கி அவர்களை ஏமாற்றிவரும் சமசமாஜத் தலைவர்களின் சுயரூபத்தை தோலுரித்துக் காட்டுவதற்கே இதை இங்கு குறிப்பிடுகிறேம்! இத்தகைய கோழைதனமும் ஆஷாட பூதித்தனமும் நிறைந்தவர்களை தங்களை மார்க்சீய வாதிகள் என்று அழைத்துக்கொள்வது கார்ல்மார்க்சுக்கே தீராத அவமானம்! உலகெங்கிலுமுள்ள மார்க்சீய வாதிகளுக்கெல்லாம் மாருத அவமானம்! எட்மண்ட் சமரக்கொடி போன்றவர்கள் இருந்திருந்தால் ஒருபோதுமே இப்படிச் செய்திருக்கமாட்டார்கள்!

### தமிழர் போராட்டம்!

கடந்த கால் நூற்றுண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழினத்தின் உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்து எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கிறது. கடந்த 3ஆண்டுகளாக அவ

# சிங்கள சோசலிசமோ-'நளீம் ஹாஜியார்' சோசலிசமோ எங்களுக்கு வேண்டாம்!

கிறேம். எதிர்காலத்திலும் அப்பிடி மீண்டும் செய்வதற்கு பயப்பட மாட்டோம்!"

என்று முழங்கினர் டாக்டர் என். எம். பெரேரா.

### தொழிலாளர் நம்பிக்கை

மறுநாள் சனிக்கிழமை (16-11-74) அன்று சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கைத்தொழிற் சங்க சம்மேளனம் கொழும்பில் நடத்தவிருந்த ஊர்வலத்தை அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் அரசாங்கம் தடைசெய்திருந்தது. டாக்டர் என். எம். மின் மேற்கண்ட ஆக்கிரோஷமான பேச்சு, அரசாங்கம் தடைபோட்டாலும் தடையையும் மீறி ஊர்வலத்தை சமசமாஜக் கட்சித் தலைவர்கள் நடத்தியே தீருவார்கள் என்கிற ஒரு அபிப்பிராயத்தை அக்கட்சியை ஆதரிக்கும் அப்பாவித் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்க வேண்டும்!

ஏனெனில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தொழிலாளவர்க்கத்தினரின் தலையிலேயிருந்து கொண்டு, புரட்சியென்றும், பலாத்காரம் என்றும் கூக்குரல் கிளப்பி—இந்நாட்டு இளைய தலைமுறையினரை வன்முறை பாதைக்கு இட்டுச் சென்றவர்கள் இந்தப் போலிமார்க்சிய வாதிகள் தாம்! எனவே தங்கள் தலைவர்களை, வீராதிவிரர்கள், சூராதி சூரர்கள் என்று கருதி அவர்களை இன்னும் ஆதரிக்கும் அப்பாவிகளான தொழிலாளர்கள் நம்பியிருந்திருக்கக் கூடும்!

டாக்டர் எம். எம். பெரேராவின் ஆவேசப் பேச்சைக் கேட்ட தொழிலாளர்கள் பொலிஸ் தடை விதித்தால், அதையும் மீறி சமசமாஜத் தலைவர்கள் ஊர்வலம் நடத்தியே தீருவார்கள் என்றஎண்ணத்தில் சனிக்கிழமை பகல் [illegible] [illegible] கணக்கில் சுலோக அட்டை

நான் சொல்லவேண்டும். இன்று பிற்பகல் ஒரு மணி முதல் நாளைக் காலைவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது! எனவே நீங்கள் சமசமாஜக் கட்சியின் உண்மையான புரட்சியாளனுக இருந்தால், எனது வார்த்தைக்கு ஏனென்று எதிர்க்கேள்வி கேளாமல் கட்டுப்பட்டு, உடனடியாக இந்தஇடத்தை விட்டு, அமைதியாக கலைந்து பஸ்களில் ஏறி உங்கள் விடுகளுக்கு செல்லுங்கள்!"

'புரட்சிக்கு' வந்திருந்த தங்களை வீட்டுக்குப்போகச் சொன்ன அந்தச் சூராதி சூரரான 'செஞ் சட்டைத் தளபதி'யின் பேச்சைக் கேட்டு, இதுகாலவரை சமசமாஜிகளின் போதனையால் எடுபட்டு ஏமாந்திருந்த ஒரு தொழிலாளி—முதல்நாள் டாக்டர் என். எம். பெரேரா கூறியிருந்ததை நினைவிற்கொண்டு— 'We will fight back' — நாங்கள் திருப்பிச் சண்டையிடுவோம்!' என்று கூறினராம்!

உடனே, அவர் மீது வாசுதேவ நாணயக்கார துள்ளிப் பாய்ந்தார்! "தலைமைக்குக்கட்டுப்படாவிடின் நீ ஒரு துரோகி!"

வாசுதேவாவின் வாயிலிருந்து ஆத்திரத்துடன் வார்த்தைகள் வெளிவந்தன. இதன் பின்னும்—தலைவர்களின் போலித்தனத்தை தெரிந்துகொண்ட பின்னர் —அங்கு நிற்பதற்கு தொழிலாளர்கள் என்ன வெறும் பேயர்களா!

"புரட்சி வீரர்கள்" அவசரம் அவசரமாக அங்கு நின்ற பஸ்களில் பதறியபடி சிதறியோடி இடம் பிடிப்பதில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கினர். பகல் ஒரு மணிக்கு முன்னர் வீடு போய்ச் சேரவேண்டுமே! வெறும் வாய்ச் சவடால் அடிக்கும் சமசமாஜத் தலைவர்களின் கோழைத்தனத்தை அன்று தொழிலாளர்களும் நாட்டு மக்களும்

சரகாலச் சட்டங்களின் கீழ் தமிழர் கூட்டணி எத்தனையோ போராட்டங்களை நடத்தி வருகிறது; தமிழ் இளைஞர்பேரவைகூட திட்டமிட்டபடி பல இயக்கங்களை அவசரகாலச்சட்டத்தின்கீழ் துணிகரமாக நடத்தியிருக்கிறது. ஆனுல், அவர்கள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் நிதானமாக இறங்கி அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனரே தவிர—தங்களால் முடியாத காரியத்தைப்பற்றி 'வீரம்' பேசி விட்டு பின்னர், ஒருபோதும் அவர்கள் பின்வாங்கிக்கொண்டதில்லை! போலித்தனமான வீரத்தை —செயற்படுத்த முடியாத வாய் வீரத்தை—அவர்கள் கொட்டியதில்லை!

### முற்பகல் செய்யின்...!

இவ்வளவு காலமும் சமசமாஜக்கட்சியினர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக அவசரகாலச்சட்ட விதிகளை ஏவிவிட்டு, தமிழ் இளைஞர்களை சிறைக்குள் தள்ளியும் வேறு பல கொடுமைகள் இழைத்தும் வந்திருக்கின்றனர். இப்போது சமசமாஜிகளுக்கு எதிராக அதே அவசரகாலச் சட்டமும், ஊரடங்குச் சட்டமும் திருப்பி விடப்பட்டுள்ளது. முற்பகல் செய்தது பிற்பகலில் விளையும் என்பது தமிழர்களின் நம்பிக்கை; அந்த நம்பிக்கை உண்மையாகி வருகிறது.

### நளீம் ஹாஜியார் சோசலிசம்!

தமிழர்கள் சோசலிசத்தின் எதிரிகள் அல்லர்; ஆனுல் அவர்கள் சிங்கள சோசலிசத்தையோ, "நளீம் ஹாஜியார் சோசலிசத்தையோ" ஒருபோதும் ஏற்கத் தயாராக இல்லை! உண்மையான இன மொழி, வர்க்க சமத்துவத்திற்கு வழிவகுக்கும் — சோசலிசத்தையே அவர்கள் நாடி நிற்கிறர்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேம்!

—தமிழீழதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தமிழர் கூட்டணி பெறுகின்ற பெரு வெற்றியே சுதந்திரப் போராட்டத்தின் முதற்படி!"

-செல்வா

"இந்நாட்டிலே குடியரசு அமைக்கப்பட்டு தமிழ் மக்களுடைய உரிமைகள் யாவும் பறிக்கப்பட்ட போது நாம் அதை எதிர்த்தோம். அப்போது நாம் முதலாளி வர்க்கத்தைப் பாதுகாக்க வீணை எதிர்ப்புத் தெரிவிக்கின்ரேம் என்றும் தமிழ் மக்களது ஆதரவு தமக்கே உண்டென்றும் அரசாங்கம் கூறியது.

"தமிழ் மக்கள் அரசாங்கம் மீது வைத்துள்ள நம்பிக்கையை பரீட்சிக்குமுகமாக நான் எனது பதவியை ராஜிஞமா செய்து அரசாங்கத்திற்கு மக்களிடம் ஆதரவு உண்டாவென்பதை பார்ப்பதற்கு சந்தர்ப்பமளித்தேன். ஆனல் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை.

இத்தேர்தலில் நாம் வெற்றிபெற்ருல் இது குறித்து அரசாங்கத்திடம் கேட்போம். தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ விரும்புகிருர்கள், என்பதை இத்தேர்தல் மூலம் அவர்கள் நிரூபித்து விட்டார்கள் எமது உரிமைகளை தாருங்கள் என்று கேட்போம்.

அதற்கும் மறுத்தால் தமிழ் மக்களிடையே ஒரு வாக்கெடுப்பு நடத்தும்படி கேட்போம். அப்படிப் படிப்படியாக எமது சுதந்திரப் போராட்டத்தை சாத்வீக முறையில் மேற்கொண்டு எமது சுயநிர்ணய உரிமைகளை பெறுவதற்கான வழிவகைகளைக் காண்போம். ஆகவே காங்கேசன்துறை தேர்தலின் முடிவே தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்பது திண்ணம்.

ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் சாதி, மத, மொழிபேதமின்றி தம்மைத்தாமே ஆள வழியுண்டு. ஆனல் இங்கு சந்தர்ப்பவசத்தினல் பெரும்பான்மையினம் ஒன்று ஆட்சி செய்வதால் சிறுபான்மை இனங்கள் அடக்கி ஆளப்படுகின்றன. இந்நிலையில் ஆளப்படும் இனங்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய நிலையை உருவாக்கவும் உரிமையுடையன. இந்த நிலையிலேயே தமிழினம் இன்று நிற்கிறது.

தமிழினம் இந்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருவதுடன் இந்நாட்டின் பல பிரதேசங்களை ஆண்டும் வந்திருக்கின்றது. பின்னர் அந்நியர் படையெடுத்த சமயம் முதலில் சிங்கள இராச்சியங்கள் அவர்களின் கைக்குமாறின. அதன் பின்னரும் 2 வருடங்கள் கூடுதலாக தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள். ஆகவே இந்நாட்டை ஆண்ட பரம்பரையில் வந்த நாமும் எம்மை நாமே ஆளக்கூடிய வழிவகைகளையே இன்று நாடி நிற்கிரேம்.

காட்டுமிருங்களைப் போல சண்டையிட்டு அழிவதற்கு நாம் விரும்பவில்லை. நீதி நியாயமான அகிம்சா வழியில்தான் எமது உரிமையை நிலைநாட்ட முன்வந்துள்ளோம்!

"எனவேகாங்கேசன்துறை இடைத்தேர்தல் தமிழ் மக்களைப்பொறுத்தவரை மிக முக்கியமானது. இத்தேர்தலில் தமிழர் கூட்டணி அமோகமாக வெற்றிபெறுவதன் மூலமே எதிர்காலத்தில் எமது சுதந்திரப்பாதையில் முன்னேறிச் சென்று தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தமுடியும்!"

—இவ்வாறு தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதியில் சென்றவார இறுதியில்நடைபெற்ற கருத்தரங்குகளில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

## காவலூர் தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவை கிளை துவக்கம்

தமிழ் இளைஞர் பேரவையின் காவலூர்த் தொகுதிக் கிளை அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. காவலூர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற இக்கிளைத் துவக்க விழாவிற்கு ஏராளமான இளைஞர்கள் வருகை தந்திருந்தனர். கிளையின் தலைவராக எஸ். கே. மகேந்திரனும் செயலாளராக நா. பாலச்சந்திரனும், பொருளாளராக சு. குணரத்தினமும், துணைத்தலைவராக நயினை என். எஸ். சிங்கமும் துணைச்செயலாளராக க. கணேசபிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சரித்திரம் அறியாத தரித்திரம்!

"பண்டாரவன்னியனின் கதையை மேடை மேடையாக கூறித்திரியும் தமிழர் கூட்டணியினர் பண்டார வன்னியன் செய்தது மாதிரி எமது தலைவியையும் அழைத்து தமது பிரச்சினைகளையும் பேசித் தீர்க்கலாம்தானே!"

—குமாரசூரியர் (வீரகேசரி 11-11-74)

—"அட சரித்திரம் அறியாத தரித்திரமே! பண்டார வன்னியன் எங்கே யாரை பேச்சுவார்த்தைக்குஅழைத்தான்? ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அல்லவா பண்டார வன்னியனின் காலில் வீழ்ந்து வணங்கிவலிந்து பேச்சுவார்த்தைக்கு அவனை அழைத்தது! குமாரசூரியரின் தலைவியாருக்கு தமிழர் கூட்டணி தனது ஆறு அம்சத்திட்டத்தை அனுப்பி வைத்து ஆண்டுகள் இரண்டரை கழிந்து விட்டனவே — ஆங்கிலேய ஏகாதிபத்தியம் செய்ததுபோல, சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைவியார் அன்ரே தமிழர் கூட்டணியை இதுவரை பேச்சுக்கு அழைத்திருக்கவேண்டும்! சரித்திரம் தெரியாவிட்டால் குமாரசூரியர் பேசாமலிருப்பது நல்லது" என்கிறன் நம் ஆபீஸ் பையன்.

## அலிபாவும் 40...

—1-ம் பக்கத் தொடர்

இப்போது தன் சொற்படி நடக்காத யாழ் அரசாங்க அதிபரை யாழ்ப்பாணத்தை விட்டே துரத்திவிட்டால் தான் விரும்பியபடி கொட்டமடிக்கலாம் என்று திட்டம் போட்ட துரோகப்பர்—அதற்காக கொழும்புக்கு தன் எஜமானி அம்மாவிடமும் 'சின்ன' எஜமானிடம் காவடி தூக்கி வந்திருப்பதாக பொது மக்கள் பேசிக்கொள்கிருர்கள்.

இதுஇப்படியிருக்ககூட்டுறவுக் கடைகளில் நடந்தகூப்பன் மோசடியை நினைவுபடுத்த யாழ்ப்பாணத்துச் சுவர்களில், எல்லாம் "அலிபாபாவும் 40 திருடர்களும்" 'கூட்டுறவு சங்கங்களை சுரண்டாதே' என்பன போன்ற சுலோகங்கள் காட்சியளிக்கின்றன!

## அரசாங்கக் கட்சி

—1-ம் பக்கத் தொடர்

ந்த பதில் பிரதமர் திரு. மைத்திரிபால சேனநாயகா ஊரடங்குச் சட்டத்தை ஏவிவிட்டு, நசுக்கிய பின்னர், ஆளுங்கட்சிகளுக்குள் பிளவு உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

ஐக்கிய முன்னணி அரசின் முற்போக்குத் திட்டங்களுக்கெல்லாம் தாமே தான் முழுக்க முழுக்க காரண கர்த்தாக்கள் சமசமாஜிகள் உரிமைகொண்டாடும் அதே வேளையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரோ அதை மறுத்து அவையெல்லாம் தங்கள் தலைவரான காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவினுடைய திட்டங்களே தவிர வேறு எந்தக் கட்சியும் அவற்றுக்கு உரிமைகொண்டாட முடியாது என்று அறைந்து கூறி வருகின்றனர்.

டாக்டர் என். எம். பெரேராவைப்போல — பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவும் 'நிமிர்ந்து' நிற்கவேண்டும் என்பது சமசமாஜிகள் கோஷம்; யாரைப்போலவும் நான் நிமிர்ந்து நிற்கவேண்டியதில்லை; காலஞ்சென்ற எனது கணவரையே பின்பற்றுவேன் என்பது திருமதி பண்டாரநாயகாவின் பதில்!

சோசலிசத்தில் தங்கு மடத்திற்கு இடமில்லை; பூரண தேசியமயமின்றி சோசலிசம் ஏற்படாது; அரைவேக்காட்டு சோசலிசவாதிகள் அரசாங்கத்திலிருந்து வெளியேறலாம் என்பது சமசமாஜத் தலைவரின் வாதம்!

ஏற்கெனவே தேசிய மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன; அத்துடன் தேசியமயக் கொள்கையால் வெளிநாடுகள் இங்கு மூலதனம் இடுவதற்கு அஞ்சுகின்றன; தேசியமயக்கொள்கையை மீள ஆராயவேண்டும் என்பது "பொறுப்பற்ற தேசியமயக் கூக்குரலை கிளப்புவோருக்கு" பிரதமர் கொடுக்கும் சாட்டையடி!

இவ்வாறு அடிப்படையிலான கருத்து முரண்பாடுகள் ஒரு புறமிருக்க, அரசாங்கத்திலும் ஐக்கிய முன்னணிக்குள் சமசமாஜிகள் அளவுக்கு விஞ்சி ஊடுருவி — சுதந்திரக் கட்சியினரை விழுங்கி அரசாங்கத்தைக் கைப்பற்றி போலித்தனமான மார்க்சீய சர்வாதிகாரத்தை கொண்டுவர முயற்சிப்பதாகவும் இதை சுதந்திரக் கட்சியினர் இப்போது உணர்ந்து கொண்டுவிட்டதாகவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஆனல், அதே நேரத்தில் சுதந்திரக் கட்சியினரோ சமசமாஜப் புலியின் வாலைப் பிடித்துக்கொண்டிருப்பதால், அதை விடமுடியாமல் தவிக்கிருர்களாம்.

சமசமாஜ—சுதந்திரக் கட்சியினரின் மோதல், ஐக்கிய முன்னணிக்குள்ளிருக்கும் தேசிய முதலாளிகளுக்கும் தீவிர இடதுசாரிகளுக்கு மிடையிலான மோதுதலே என்று கருதுவோரும் இருக்கின்றனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருக்கும் தேசிய முதலாளிகளை நிதியமைச்சர் தமது புதிய வரவு செலவுத்திட்டத்தில் போட்டுள்ள வரிகள் பெருமளவு பாதித்துள்ளதாகவும், இதனல் ஆத்திரமடைந்த சிறீலங்கா முதலாளிகள் நிதியமைச்சர் மீது ஆத்திரமடைந்துள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது.

சுதந்திரக் கட்சி முதலாளிகளை பழிவாங்குவதற்காக வேண்டுமென்றே டாக்டர் என். எம். இத்தகைய வரிச்சுமையை அவர்கள் மீது ஏற்றியுள்ளதாகவும் பேசப்படுகிறது.

எது எப்படியிருப்பினும்—அரசாங்கக் கட்சிகளுக்குள் விரைவில் பெரும் பிளவுவெடிப்பது யாராலும் தடுக்கமுடியாது; அப்போது தான் யார் யாரை விழுங்கியுள்ளார்கள் என்ற உண்மை அம்பலமாகும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## சனவரியில் சட்ட . . .

—3-ம் பக்கத் தொடர்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் பதவிகளைக்கொடுக்கலாம். பலருக்கு சமாதான நீதவான் பட்டங்களை அள்ளி எறியலாம். இவை மூலம் தமிழ் மக்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று தொடர்ந்து கனவு கண்டுகொண்டு இருந்தால் அது இறுதியில் உங்களுக்கு ஏமாற்றமாகவே முடியும் என்று கூறி வைக்க விரும்புகிறேன்.

## துரோகங்களுக்கு...

—2-ம் பக்கத் தொடர்

பொம்மை'களை வைத்துவிளையாட்டுக் காட்டுகிருன் பாவி! இவனது கபடநாடகத்தை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்!'

இச்சமயத்தில் இளஞ்சிங்கம — தமிழ் ஈழ விடுதலை வீரன்—சிவகுமாரன் சிங்கம் போல் துள்ளி எழுகிருன்!

"அந்தத்துரோகி — சங்கிலி மன்னன் இங்கு கூறியது போன்று காக்கை வன்னியனின் வாரிசு-இதுமட்டுமா செய்கிருன்? அதோ அங்கே உட்கார்ந்திருக்கிருர்களே ஒன்பது தங்கத்தம்பிகள்—1974ம் ஆண்டு தைமாதம் 10ம் திகதி தமிழமுதம் பருக வெனயாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னே திரண்டு வந்திருந்து சிங்கள வெறி பிடித்த பொலிஸ் நாய்களுக்கு தம் இன்னுயிரைத் தந்த தியாகவீரர்கள்—அந்தத் தியாக வீரர்களுக்கு யாழ் நகரில் சிலையெடுப்பதற்கு—நினைவுச்சின்னம் நிறுவுவதற்கு — ஒரு துண்டுக்காணியைக் கூட தாரது சாக்குப்போக்குச் சொல்லித்தட்டிக் கழித்துவருகிருன் துரோகப்பன்? அவன் அங்கு செய்யும் அநியாயங்களையும், கொட்டங்களையும் பார்க்கும்போது போது நான் அங்கு இல்லையே என்று தான் கவலைப்படுகிறேன்!"

என்று உறுமினன் சிவகுமாரன்!

இதைத்தொடர்ந்து உலகத் தமிழ்ச் சங்கம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:-

ஈழத்தமிழினத்தைக் காட்டிக்கொடுத்து — எதிரியின் கைப்பொம்மையாக இயங்கும் துரோகப்பன் சங்கிலியனுக்கும் மற்றவர்களுக்கும் தன் கறைபடிந்த கரங்களால் திறந்து வைத்துள்ள சிலைகள் என்று கூறப்படும் சிமெண்டு பொம்மைகளை ஏற்றுக்கொள்வதில்லையென்றும் நிலை வைப்பது மூலம் தனது துரோகங்களுக்கு திரைபோடும் துரோகப்பனின் ஈனத்தனமான கயமைப் போக்கினைக் கண்டிப்பதென்றும் தீர்மானிக்கிரேம்—

இத்தீர்மானத்தில் பின்வருவோர் கையொப்பமிட்டனர்:-

திருவள்ளுவர், ஔவையார், சோமசுந்தரப்புலவர், சேர் பொன். இராமநாதன் ஆனந்தக்குமாரசாமி, சங்கிலி மன்னன் அடுத்த பிறவியில் தமிழனகப் பிறக்க ஆசைப்பட்ட மகாத்மா காந்தியடிகளின் கையெழுத்தையும் பின்னர் பெற்றுக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## ஆண்டவன் கோபத்துக்கு காரணம்!

"கடவுள் கோபமுற்றதால் வடக்கில் மழையில்லை!"

— அருளம்பலம்

—ஆம், நல்லூர்க்கந்தனை 13 மணிநேரம் பக்தர்களிடமிருந்து பிரித்து தடுப்புக் காவலில் வைத்து—முருகனை வணங்க ஆர்வத்தோடு வந்த ஏராளமான பக்தர்களை துப்பாக்கியைக்காட்டி விரட்டி விட்டு—புனிதமான விபூதியை அணிந்துகொண்டு முருகன் முன்னிலையில் அம்மையாருக்கு கால் கழுவி சேவை செய்த அருளம்பலம் கும்பலின் அனுச்சார செயலினல் தான் ஆண்டவன் கோபித்துக்கொண்டு மழையை தராமலிருக்கிருர் என்கிருர் — பிரதமர் வந்த போது நல்லூர்க் கோவிலுக்குசெல்லவிடாது பொலிசாரால் துரத்தப்பட்ட ஒரு பெண்மணி!


### நீம் வாசனை சவர்க்காரம்

ஆரோக்கியமான வாழ்வுக்கு சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சவர்க்காரம் விற்பனையாகின்றது. இன்றே வாங்கி பாவியுங்கள்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பழமொழிகளும் பொன்மொழிகளும் என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முக்கூட்டரசாங்கக் கட்சிகளுக்கிடையேயுள்ள குத்துவெட்டுகளின் வெளிப்பாடே வரவுசெலவுதிட்டம்'

"நிதி அமைச்சர் அவர்கள் அம்மையாருடைய நோக்கத்துக்கு முரணுகத் தமது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறுர். தனியார் துறைக்கு இடம் கொடுக்கவில்லை.

பிரதமர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கே வந்த



டைய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் உள்ள முரண்பாட்டை எடுத்துக் காட்டுகிறது என்று கூறுகிறேன். சோசலிசப் பாதையில் செல்கின்ற கௌரவ நிதி அமைச்சர் கூறுவது போல் நின்று பார்ப்பதற்கு நேரம் இல்லை. ஒரே போக்காகத்தான் போக வேண்டுமென்பதில் எத்தகைய ஐயமுமில்லை. இந்த முரண்பாடு நாட்டினுடைய வளர்ச்சிக்கு—முன்னேற்றத்துக்கு — மிகவும் தடையாக இருக்கும் என்பது தெளிவு.

இது கட்சிகளுக்கிடையிலுள்ள முரண்பாடு என்றுல் அது பற்றி நாம் பேச வேண்டியதில்லை. இந்த முரண்பாட்டால் நாட்டின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிற காரணத்திஞலே தான் நாங்களும் இதைப்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது.

இன்று பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடை ஏற்பட்டிருக்கிறதுஎன்பதை எவரும் மறுக்க முடியாது.

கொடுக்கப்பட்டது. 1937ம் ஆண்டு 1000தொன் கொடுக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு 900 தொன் தான் கொடுக்கப்பட்டது.

உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று கூறுகிற அரசாங்கம் படிப்படியாக யாழ்ப்பாணத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தியைக் குறைத்து வருகிறது, இதற்கு முக்கிமான ஒரு காரணம் அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களும் விவசாய அபிவிருத்திச் சங்கங்களும் அரசியல் அடிப்படையிலே ஸ்தாபிக்கப்பட்டதேயாகும்.

உடுவிலைப் பொறுத்தவரையிலே விவசாய அபிவிருத்தி சங்கத்தின் தலைவருக்கு உருளைக் கிழங்கு என்றுல் என்னவென்று தெரியாது. உருளைக் கிழங்குக்கும் வெங்காயத்துக்கும வித்தியாசம் தெரியாது. அப்படியான ஒருவரை இத்தகைய முக்கியமான ஸ்தாபனத்துக்கு தலைவராக்கிஞல் உற்பத்தியைச்செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கௌரவ அமைச்சர் பேசும்பொழுது கூறிஞர், அரசியல் வித்தியாசங்களையும் மறந்து உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென்று. இன்று இந்த வித்தியாசத்தைக் காட்டுகிறவர்கள் யார்? அரசியல் வித்தியாசத்தை மிகத் திவிரமாகக் காட்டுகிறவர்கள் அரசாங்கக் கட்சியை, முக்கியமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை. யாழ்ப்பாணத்திலே விதை உருளைக் கிழங்கு வாங்க வேண்டுமென்ருல், கொத்தமல்லி வாங்கவேண்டுமென்ருல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலே அங்கத்தவராக இருக்க வேண்டும்!

## தேசியப் பேரவையில் உடுவில் தர்மலிங்கம் பா. உ.

தும் வெளிநாடுகள் இலங்கையில் மூலதனமிடவேண்டும் என்ற அடிப்படையில் பேசியிருக்கிறுர். ஜப்பானிலிருந்தும் மேற்கு ஜெர்மனியிலிருந்தும் பலர் இலங்கையில் மூலதனமிட வருவார்கள் என்று எதிர்பார்த்தார். தேசியமயமாக்குவதுபற்றிப் பேசக் கூடாது என்று கூறிஞர். அப்படிப் பேசிஞல் வெளி நாடுகளிலுள்ளவர்கள் வந்து மூலதனமிடமாட்டார்கள் என்று சொன்ஞர். அவையெல்லாவற்றுக்கும் முரணுகத்தான் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கிறது.

ஆகையால் தான் இந்த வரவு செலவுத் திட்டம் கௌரவ நிதி அமைச்சரு

இந்த முரண்பாடு நாட்டையும் மக்களையும் பெருமளவில் தாக்கும். பண வீக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டுமென்ருல் முதலில் எங்கள் மத்தியிலுள்ள கருத்து வித்தியாசங்களை இல்லாமல்செய்யவேண்டும்.

### யாழ் விவசாயிகள் புறக்கணிப்பு

உருளைக் கிழங்கு உற்பத்தி பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். யாழ்ப்பாணக் கமக்காரர்கள் உருளைக்கிழங்கு உற்பத்தியிலே மிகவும் தீவிரமாக ஈடுபட்டவர்கள். 1972ஆம் ஆண்டு 1200 தொன் விதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணக் கமக்காரர்களுக்குக்


## வாசித்துவிட்டீர்களா?

- ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் படிக்கவேண்டிய நூல்!
- தமிழ் ஈழவிடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரும் கையில் வைத்திருக்கவேண்டிய அறிவாயுதம்!

### 'அனைத்துலக நீதிச்சபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை'

- சிங்கள ஏகாதிபத்தியக் கொடுமை பற்றி தந்தை செல்வா சமர்ப்பித்த முறையீடு

தனிப்பிரதி ரூபா 2.00
(தபால் செலவு சதம் 60.)

விற்பனையாளர்களுக்கு பிரதியொன்றுக்கு 25 சதம் கழிவுண்டு.

வேண்டுவோர் தொடர்புகொள்ளவும்:-

நிர்வாகி,
சுதந்திரன்,
194. ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு—12.


# பொன் சீதனத்தாரின் புலுடாக்கள் ஆரம்பம்!

## யாழ் கல்வித் திணைக்களமும் தேர்தற் பிரச்சாரத்திலிறங்குமா?

பொன்னம்பல சீதனத்தார் பலமுறை தேர்தற் குதிரையில் ஏறிச் சறுக்கி விழுந்தவர். சென்ற தேர்தலில் தந்தை செல்வநாயகத்தோடு போட்டியிட்டுப் படுதோல்வியடைந்தபோது இன்றுவிட்டேன் கொண்டலடி என்று உறுதிசெய்து கொண்டவர். நோயைக் காரணம் காட்டி ரஷ்யா சென்று மீண்டார். ஏழைகள் செருப்பணியும்வரை செருப்பணியேன் என்ற பொதுவுடைமைப் பொன்மனத்தார், சோசலிசச்செம்மல், யாழ் வைத்தியர்கள் கொடுத்த அதே மருந்தை உருசிய வைத்தியர்களிடம் பெற்று உண்பதற்காகவும் ஓய்வெடுப்பதற்காகவும் உருசியா சென்ற ஏழை. தந்தைசெல்வா தமிழுரிமை கோரி பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து தேர்தல் நிலையை உருவாக்கியபோது அவருடைய நோய் பலமானது. மீண்டும் உருசியா சென்றுர். மீண்டார். அரசியலிலும்பொதுப் பணிகளிலுமிருந்து ஓய்வெடுக்கும்படி உருசிய வைத்தியர்கள் கூறியதாக இங்கு வந்து கதையளந்தார்.

அண்மையில் மனைவியை இழந்த பின் அவரது சுறுசுறுப்பு மீண்டது நோயும் மாண்டது. அம்மையார் காங்கேயன் தேர்தல்வரும் என்று அறிவித்ததும் சீதனத்தாரின் சுறுசுறுப்பு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அளவெட்டிக்கு மின்சாரம் தருவேன்; மாவிட்டபுரத்திற்கு மண் போடுவேன்; பன்ஞலைக்குப் பல் தொழில் தருவேன்; இளைஞருக்கு உத்தியோகம் தருவேன் என்று திறவாத படலை எல்லாம் திறந்து இனிக்கப் பேசி வருகிறுர். சாதிமாஞும் சீதனத்தார் சென்ற தேர்தலின்போது "தேர்தலில் தோற்ருலும் வென்ருலும் மல்லாகத்தில் எனது கந்தோர் இரவுபகலாக இயங்கும். எனக்கு ஆதரவு தந்தவருக்கும் எதிர்ப்புக் காட்டியவர்க்கும் பேதமின்றி உதவு[illegible] காங்கேசன் துறையில் பரப்பிஞர். தேர்தலின்பின் கூட்டம் வைக்கக் காணி வழங்கிய மாட்டுப் பரியாரியார் சிபாரிசுக் கடிதம் வாங்கப் போனபோது "உங்களை எனக்குத் தெரியேல்லை. கடிதம் தரமுடியாது." என்று துரத்தியடித்த பெருமைக்குரியவர். மீண்டும் சேவை என்று படலை திறக்கிறுர்.

தேர்தலுக்குப் பின் தண்டிகைப் பூதனின் காசியிற பிள்ளையாரோடு சேர்ந்து அதிகாரமமதையில் கல்லூரிகளிலும் கந்தோர்களிலும் வேலை செய்தவர்களைப் பந்தாடுவதில் இன்பம் கண்டார். பிறகு எனக்கு ஏன் தொல்லையென்று உருசியாவுக்கு மூளை கழுவச் செல்லும் போது "முருகா பாதி ராச்சியம் ஆண்ட நீ முழு இராச்சியத்தையும் ஆள். குண்டும் உனக்கே; கூட்டுறவும் உனக்கே" என்று அநியாயம் செய்யும் தனி உரிமையை முழுவதும் முருகனுக்கு அளித்துச் சென்றுர். இப்போது முருகனையே வெல்ல இந்தச்சூரன் 'பலம்' கிளம்பி விட்டது.

கல்விஅலுவலகத்தில் தேர்தலின் பின் இவர் செய்த அட்டகாசங்கள் ஏராளம்! ஏராளம்! சிங்கள "மகாதந்தி" பெருந்தலையாக இருந்தபோது தங்கள் ஆட்டம் சரிவராததால் அவரை மாற்ற சீதனத்தாரும் முருகனும் பிறவால்களும் முயன்று வெற்றிகண்டனர். பின் இருமரபும் தூய புத்தூர் மழவரின் பௌத்திரர் இவர்களின் பவித்திரமான அன்பிஞல் இங்கு வந்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிஞர்; அடங்கிஞர். எல்லாம் நாங்களே என்று ஆணவம் பேசியோரால் திருவாசகம் தந்த செம்மலை திருப்பிக்கொண்டு வரமுடியாமல் போய்விட்டது.

இப்போது புதிய கல்வி அதிகாரி வந்துள்ளார். சீதனத்தாரின் தேர்தற் திருவிழா சீசனும் கல்வியதிகாரியின் கெட்ட காலமும் ஒன்ருக வந்துள்ளதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. அரசாங்க இயந்திரம் முழுவதும் சீதனத்தாரின் வெற்றிக்காகப் பயன்படுத்தப்படவேண்டும் என்ற உத்தரவு. நேர்மையாக இயங்க முயன்ற கல்வி அதிகாரிக்கு ஒருசோதனையாக வந்துவிட்டதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

சீதனத்தார்பாடசாலைக்கு மாணவரைச் சட்டவிரோதமாக அனுமதிக்கும்படி கல்வி அதிகாரிக்குக் கட்டளை அனுப்புவதாகவும் மேலிடத்திற்குப் பயந்த அதிகாரி அவருக்குஇசைவாக அதிபர்களுக்குக் கட்டளை அனுப்புவதாகவும் பேசப்கிறது. இதஞல் அதிபர்கள் பாடு திண்டாட்டமாகிவருகிறதாம்.

சீதனத்தாரின் கடிதத்தோடு அனுமதிபெற்ற ஒருவர் சீதனத்தாரின் இந்தத் திறமையைப் பறைசாற்றியதால் இந்த இரகசியம் ஓரிடத்தில் அம்பலத்திற்கு வந்துள்ளது. இதஞல் பெற்ருேர் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனராம். உண்மையை உணராத தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் அப்பாவிகள் மீது சீறிப்பாய்ந்தாராம். 'இது பொறுப்பதில்லை. எம். சீ. யிடம் போகிறேன்' என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறுராம்.

பாடசாலைக்கு மாணவரைச் சேர்க்கும் சட்டங்களைத் தனது வசதிக்கேற்ப மீறுவதற்கு அதிபர்கள் சீதனத்தாரால் தூண்டப்படுவார்களா? அதிபர்களுக்கும் பெற்ருேர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்படுமா? பாடசாலைகளில் அயலிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கிடைக்காது, எல்லைகளுக்கு அப்பாலுள்ள உயர்சாதியினருக்கு இடம் கிடைக்க வழி வகுக்கப்படுமா? ஏழைகள் உதாசீனம் செய்யப்பட்டு வாக்கு வேட்டையாட உதவக்கூடிய பணக்காரர்களுக்குப் பாடசாலை அனுமதியில் சலுகை வழங்கப்படுமா? என்று மக்கள் பேசிக்கொள்கிறுர்கள்.

கல்வித் திணைக்கள அதிகாரிகள் தேர்தற் பிரசாரகர்களாக இயங்குவார்களா? கல்வி அலுவலகம் பிரசார நிலையமாக மாற்றப்படுமா? என்று மக்கள் கேட்கிறுர்கள். ஊழல் நிலைக்குமா? விமோசனம் கிடைக்குமா?

—பொய்ப்பகையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழினத்தார் அனைவரும், கவலைகளை மறந்து—ஒன்ருகக் கூடி — ஆடிப்பாடி ஆனந்தமாகக் கொண்டாடி மகிழத்தக்க விதத்தில் 'திருநாள்' ஒன்று ஏற்படவேண்டும் என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. தை முதல் நாளாம் பொங்கல் திருநாளை இத்தகைய திருநாளாக ஓரளவுக்கு மாற்றியமைத்த பெருமையும் அவருக்கே உண்டு.

பண்டைத் தமிழகத்தில் 'இந்திரவிழா' தமிழர்களின் மகிழ்ச்சி நாளாகக்கொண்டாடப்பட்டு வந்ததை சிலப்பதிகாரம் பேசுகிறது. தமிழினத்தார் அனைவரும் குடும்பம் குடும்பமாக ஒன்றுகூடி குதூகலமாக இசையிலும் பாட்டிலும் கூத்திலும் கேளிக்கைகளிலும் ஈடுபட்டு இந்திர விழாவை இனிய விழாவாகக் கொண்டாடியதை சிலம்பு எடுத்துரைக்கிறது.

ஈழத் தமிழகத்தைப் பொறுத்தவரை—தமிழினத்தார் எல்லோரது உள்ளங்களும் களிப்பில் மிதந்திட—இசையும் கூத்தும் பண்ணும் பரதமும் எழிற்கோலங்களும் வண்ண விளக்குகளும் வீதிகள்தோறும் மெருகூட்டிட — இன்பநினைவுகளுடன் கொண்டாடிய ஒரே விழா—தமிழன்னைக்கு எடுக்கப்பட்ட நான்காவது உலகத் தமிழ் மாநாட்டுப்பெருவிழாதான்!

ஆம், தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு யாழ் நகரின் மத்தியிலுள்ள வீரசிங்க மண்டபத்தில் நடந்தாலும் —மாநாட்டினுல் ஏற்பட்ட தமிழ் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் யாழ் குடாநாட்டின் மூலைமுடுக்கெங்கிலும் — குக்கிராமங்களிலும் எதிரொலித்தது. ஒவ்வொரு ஊரிலுமுள்ள தமிழ் மக்கள் மொழி உணர்ச்சிபெருக்கெடுத்திட — தமிழ்தேசிய வேகத்திஞல் எழுச்சிபெற்று —தங்கள் ஊர்களையெல்லாம் தமிழ் மாநாட்டுக் காலத்தில் அலங்கரித்து வைத்திருந்த அழகுதான் என்னென்பேன்!

தமிழுணர்ச்சியில் எனது ஊர் அடுத்த ஊருக்குக் குறைந்ததல்ல என்கிற ஆர்வத்துடன் போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு ஊரிலுமுள்ள தமிழ் இளைஞர்கள் தங்கள் தங்கள் ஊர்களை அழகாபுரியாக்கி வைத்திருந்தனர், ஊர்கள் மட்டும் எழிற்கோலம் கொள்ளவில்லை; மக்களின் இதயங்கள் எல்லாம் பொங்கிப் பூரித்துநின்றன. உவகையும், களிப்பும் எங்கும் நிறைந்து பொங்கிப் பிரவாகித்து நின்றன.

'அடுனர் பாடுனராகி
களிக்கின்ருரலால்
கவல்கின்ருர் ஒருவரைக்
காணேன்'

என்று கம்பன் கூறியது போல—தமிழின் எதிரிகள் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் ஆனந்தக் கூத்தாடி நின்றனர் — தமிழன்னை கொலுவீற்றிருந்த பாங்கு கண்டு!

தமிழினத்தாரின் இந்த மொழியுணர்வையும் தமிழ்த் தேசிய பக்தியையும், வந்தாரை வரவேற்கும் விருந்தோம்பும் பழம் பெரும் பண்பையும் வெளிநாட்டுப் பேராளர்கள் அனைவரும் நேரடியாகக் கண்டு மகிழவும், தமிழ் மக்களின் அன்புவெள்ளத்தில் மிதந்திடவும் வழி வகுத்துத் தந்தது சுற்றுலா நிகழ்ச்சி!

ஆம், 6-1-1974 ஞாயிற்றுக்கிழமை இந்த சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார் அதற்குப் பொறுப்பாளராக செயலாற்றிய திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள். அன்று காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் பாம்கோட்டிலிருந்து சுற்றுலா வண்டிகள் புறப்படுவதாக ஏற்பாடு. வெளிநாட்டு பேராளர்கள் அனைவரும் தயாராக வந்துவிட்டனர். மணி காலை எட்டு ஆகிவிட்டது. குறிப்பிட்ட நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் தாமதமாகி விட்டதால், எதையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்துப் பழக்கப்பட்டவெள்ளைக்கார அறிஞர்கள் சிலர் பொறுமை இழந்துகொண்டிருந்தனர்.

மேலும் அவர்களை பொறுமை இழப்பதற்கு நண்பர் திரு. பேரின்பநாயகம் விடவில்லை! தில்லிப் பல்கள்!! அடடாவோ அடடா!! முதலில் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிருேம் என்பதை சொல்லவில்லையே! நிகழ்ச்சி நிரலின் படி முதலில் நாம் கீரிமலை நகுலேஸ்வரத்துக்கு போக வேண்டும். அங்குதான் நமக்குக் காலைத்தேனீர்!

இலண்டன் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர் கலாநிதி மார் அவர்களின் பக்கத்திலே நான் இருக்கிறேன். எனக்குப்பின்புறமாக வயோதிபத் தம்பதிகளான சுவீடன் நாட்டு அறிஞர் டீல் அவர்களும் திருமதி டீலும் அமர்ந்திருக்கின்றனர். முன்புறம் டாக்டர் கெலர், பேராசிரியர் வண. இராசமாணிக்கம் வண. பிறைகோம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். அறிஞர்கள் சகவாசம் ஆனந்தமானது அல்லவா?

**கோவை-மகேசன்**

சுற்றுலாவில் வரும் பேராளர்களுக்கு உதவிபுரிவதற்காக திருமதி புனிதம் திருச்செல்வம், திருமதி எம். அருணசலம், திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் ஆகியோரும் உடனிருந்தனர். நண்பர் ஈழவேந்தன் ஒவ்வொரு முக்கிய இடங்கள் வரும் போதும், உரத்த குரலெடுத்து, அது பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்து வந்தார்.

பயிர்களின் அழகு — ஆங்கு வேலைசெய்யும் தமிழ்த் தொழிலாளர்களின் பாங்கு —இவற்றில் மனம் பறி கொடுத்திருந்தனர் வெளிநாட்டுப்பேராளர்கள்!

டாக்டர் மார் அவர்களிடம் காங்கேசன் துறை தொகுதியின் சிறப்புப்பற்றி எடுத்துரைத்தேன். இலங்கை வாழ் தமிழினத்தின் தலைவர் தந்தை செல்வா அவர்களினது தொகுதி அஃதென்றும் புதிய அரசியல் சட்டத்துக்கு சவால் விட்டு, தந்தை செல்வா பா. உ. பதவியை ராஜினமா செய்த பின்னர்—இப்போது கடந்த 2ஆண்டுகளாக பிரதிநிதியில்லாது அத்தொகுதியிருப்பதுபற்றியும் பிரஸ்தாபித்தேன்.

டாக்டர்மார் அவர்களின் கண்கள் ஆச்சரியத்திஞல் அகல விரிந்தன. "இரண்டு ஆண்டுகளுக்கு இடைத்தேர்தலே நடக்கவில்லையா? இது நல்ல ஜனநாயகம்"! என்று கேலியாககுறிப்பிட்ட அவர், "திரு. செல்வநாயகம் பற்றி நிறையகேள்விப்பட்டிருக்கிறேன். அவர் ஒரு பெருந்தலைவர்!" என்றும் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகள் சுன்ஞகத்தில் ஒரு நண்பருடன் தான் முன்னர் வாழ்ந்திருப்பதாக தெரிவித்த டாக்டர் மார், இலங்கைத் தமிழர்களின் அரசியல் நிலைபற்றி மிகவும் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார்! இலங்கைத் தமிழர் அனுபவிக்கும் துன்பத்துக்கு ஆங்கிலேயர்

# 27. சுவை நிறைந்த சுற்றுலா!

கலைக் கழகத்தைச்சேர்ந்த டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் திருமதி சாலினி இளந்திரையனும் அன்று காலை விமானத்தில் வந்திறங்குவதாக இனிப்பான செய்தியுடன் வந்து சேர்ந்தார் அவர்.

சரியாகக் காலை 8 மணிக்கு தமிழ் ஆய்வதற்கு வந்திருந்த வெளிநாட்டு, உள்நாட்டு பேராளர்களை ஏற்றிக்கொண்டு பேருந்து பாம் கோட்டை விட்டு புறப்படுகிறது!

"தமிழ் வாழ்க! தமிழ் வெல்க!! என்ற திரு. ஈழவேந்தனின் எழுச்சிமுழக்கம் பேருந்துவின் இரைச்சல் சத்தத்துக்கும் மேலாக எழுகிறது. 'தமிழ் வாழ்க' என்று பேருந்துக்குள் இருந்த அனைவருமே முழக்கமிடுகிருேம்!

முதலில் ஒரு காரில் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களும் வேறு சிலரும் சென்றுகொண்டிருக்க, அதன் பின்ஞல் பேராளர்களைத் தாங்கிய பேருந்து வந்துகொண்டிருந்தது. மார்கழி மாதப் பனியுடன் சேர்ந்து, ஜில்லென்று குளிர்ந்த காற்று நம்மைத் தழுவிச்செல்ல — காலைநேரத்தில் அந்தப் பேருந்துப் பயணம் மனத்திற்கு ரம்மியமாக அமைந்து இருந்தது.

பேருந்து சென்றுகொண்டிருந்த வழி[illegible] [illegible] மாதராரின் மலர்ந்த முகங்

இந்தச் சுற்றுலாவின் போது தமிழரல்லாத வெளிநாட்டுப் பேராளர்களுக்கு விளங்க வேண்டுமென்பதற்காக நண்பர் ஈழவேந்தன் ஆங்கிலத்தில் விளக்கமளிக்க முற்பட்ட போது — வண. பிறைகோம் அவர்கள் குறுக்கிட்டார்!

"தமிழிலே பேசுங்க தம்பி! தமிழைக்கேட்க எங்களுக்கு ஆசையாயிருக்கிறது! தமிழ் எங்களுக்கு விளங்கும்!"

என்று அவர் கூறியபோது தமிழர்களாகப் பிறந்தும், இன்றைக்கு தமிழைப் பேசுவதை அவமானமாகக் கருதி அறைகுறை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசும் சில நாய்த் தமிழர்களைப்பற்றி நினைக்க எனக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

இதன் பின்னர் கேட்கவா வேண்டும்! திரு. ஈழவேந்தன் தனித் தமிழில் அடித்து முழக்க ஆரம்பித்துவிட்டார்!

சுற்றுலாவண்டி இராமநாதன் கல்லூரிக்கு அருகாக வந்தபோது — அங்கே வண்டியை நிறுத்திவிட்டு இராமநாதன் கல்லூரி பற்றியும், இலங்கை சுதந்திரத்துக்கு இராமநாதனும் அருஞசலமும் ஆற்றிய பணிகள் பற்றியும் திரு. ஈழவேந்தன் எடுத்துரைத்தார்!

வண்டிகாங்கேசன்துறைத் தொகுதியூடாக சென்றுகொண்டிருந்தது. வீதியின் இரு மருங்கிலுமுள்ளதோட்டங்களில் பச்சைப்பசேலென்று காட்சியளித்த

விட்ட தவறுதான் காரணம் என்று நான் அவரிடம் தெரிவித்த போது — பெருந்தன்மை மிக்க அந்த ஆங்கில அறிஞர் அதை அப்படியே ஏற்றுக்கொண்டார்!

என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோதும் — டாக்டர் மாரின் முகம் மிகவும் வாடிக்கிடந்தது. ஒருவேளை நான் பேச்சுக்கொடுப்பது அவருக்கு தொந்தரவாக இருக்குமோ என்று நினைத்தநான், நான் நினைத்ததை அவரிடமே கூறிவிட்டேன்!

"ஓ...அதெல்லாம் ஒன்றுமில்லை! சரியாய்ப்பசிக்கிறது! அதுதான்!" ஒன்று தமிழிலே கூறிஞர் டாக்டர்மார்!

பசிக்காதா பின்னே? நேரம் காலை 10மணியாகி விட்டதே! இதோ நகுலேஸ்வரம் வந்து விட்டோம்! நாதஸ்வர ஒலி நம்மை வரவேற்கிறது.

—வளரும்

# கொள்கைத்தங்கம் குவேந்திரராஜா!

கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கமும், அதன்பின்னர் இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதனும் பிரதிநிதித்துவம் வகித்ததும்நல்லூர்தொகுதியைச் சேர்ந்த ஊருமான தாவடியை பிறப்பிடமாகக் கொண்ட தன்மான வீரரான இளைஞர் குவேந்திரராஜா 14 வயது தொடக்கம் தமிழரசுக் கட்சித் தொண்டராக தமிழின விடுதலைப்படையில் சேர்ந்து ஓயாது உழைத்துவரும் ஒரு துடிப்பான வீரர். ஆக இருபத்திரண்டுதான் வயது என்ருலும் பெருந் தியாகங்கள் புரிந்த செயல் வீரராகத் திகழ்கிருர்.

1970 ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி பெயர்ப்பலகையில் இருந்த சிங்கள எழுத்துக்களை அழித்ததற்காகக் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருமாதம் ரிமாண்ட் கைதியாக இருந்து பின்பு விடுதலையாஞர்.

1971ம் ஆண்டு பங்குனி மாதம் 12ம் திகதி கோண்டாவிலில் புகையிரதம் எரிக்கப்பட்ட வழக்கில் பொலிசாரால் தேடப்பட்டு சித்திரை மாதம் 23ம் திகதி கோப்பாய் பொலிசில் சரண் அடைந்தார். இவ்வழக்கில் 8 மாதங்கள் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் ரிமாண்ட் கைதியாக இருந்து பின், ஒரு மாதத்தின்பின் இவ்வழக்கில் சுற்றவாளியென விடுதலை செய்யப்பட்டார்!

இதன்பின்னர் கோண்டாவில் தமிழரசுக்கட்சிக்காரியாலயத்தில் போய் சச்சரவு செய்த பொலீசாரோடு மோதப்போஞர் என்ற குற்றச்சாட்டின்பேரில்பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இதனை அடுத்து 1972 மே 21ம் திகதி இரவு குடியரசு தின பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது பொலீசாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒரு மாத காலம் ரிமாண்ட் கைதியாக இருந்தார். பின் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 3 வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலையாகி மூன்று நாட்களின்பின் இரகசிய பொலிசாரால் யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள கிங்ஸ் ஹவுசுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு ஆளாஞர். பின்பு விடுவிக்கப்பட்டார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து 10-7-72ல் கொண்டலடி வைரவர் கோவில் கைக்குண்டு வழக்கு சம்பந்தமாக நல்லூர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். யாழ் பொலிஸ் நிலையம், நல்லூர் பொலிஸ் நிலையம், கரையூர் பொலீஸ் நிலையம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மாறி மாறி 'லாக் அப்பில்' அடைக்கப்பட்டார். பின்பு 11-7-72ல் யாழ் சிறைச்சாலையில் தள்ளப்பட்டார்.

9.9.73ல் யாழ் சிறைச்சாலையில் இருந்து போகம்பறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். 26 9.73ல் கண்டி பொலிஸ் நிலையத்துக்கு சி. ஐ. டி. விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டார். மீண்டும் கண்டி போகம்பறை சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்.

போகம்பறைச் சிறையில் நோயிஞல் துன்பப்பட்ட இவரை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு 8-5-74ல் மாற்றிஞர்கள். இப்போது வெலிக்கடைச் சிறையில் இருந்துவருகிருர்.

**செந்தமிழ் இனத்தின் விடுதலைக்காக சின்னஞ்சிறு இளமைப்பொழுதில்- சிறைச்சாலைகள், பொலீஸ் நிலையங்களை துச்சமாக மதித்து - வீரத்தோடு போராடி வரும் [illegible] தமிழனுகத் திகழ்கிருர் குவேந்திரராஜா!**

## வாழைச்சேனையிலும்
## தமிழ் இளைஞர் பேரவை!

தமிழ் இளைஞர் பேரவையின் கிளையொன்று கல்குடாத் தொகுதியிலுள்ள வாழைச்சேனையிலும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கிளையின் தலைவராக திரு. இ. இராசலிங்கம் எனும் துடிப்பான இளைஞர் பணியாற்றி வருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# மலையகத் தமிழர்களை பட்டினி போட்டு கொல்லும் அரசுடன் அஸீஸ் இன்னும் ஒட்டியிருப்பதேன்?

## பேரவையில் நீலிக்கண்ணீர் வடிப்பது யாரை ஏமாற்றுவதற்கு?

## தோட்டத் தொழிலாளர்கள் குமுறல்!

மலையகத்தில் தமிழ்த்தோட்டத்தொழிலாளர்கள் பட்டினியால் சாகிறார்கள்; வறுமை காரணமாக, தோட்டத்திலுள்ள இளம் தமிழ் பெண்கள் தங்கள் கற்பைக்கூட விலை பேசுமளவுக்கு இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள்; என்கிற நெஞ்சம் பதைபதைக்கும் உண்மையை தேசிய அரசுப் பேரவையில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கும் ஜ. தொ. கா. தலைவர் ஜனாப் அஸீஸ், மலையகத் தமிழர்களை இந்த நிலைமைக்கு தள்ளியுள்ள இன்றைய அரசாங்கத்தில் தொடர்ந்தும் தொங்கிக்கொண்டிருந்து, மலையகத் தமிழனைக் காட்டிக்கொடுப்பதேன்? அரசாங்கத்தை விட்டு வெளியேறி மலையகத் தமிழனின் உரிமைக்காக போராட முன் வரத் தயங்குவதேன்? நியமன உறுப்பினர் பதவி பறிபோய் விடுமென்ற அச்சமா?

இவ்வாறு குமுறலுடன் கேட்கின்றார்கள் மலையகத் தோட்டங்களில் வாடும் தமிழ் தொழிலாளர்கள்!

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பேசிய ஜனாப் அசீஸ் மலையகத் தமிழர்களின் பரிதாப நிலைபற்றி தேசிய அரசுப்பேரவையில் ஒளிவு மறைவின்றி பேசியிருந்ததுபற்றி தோட்டத் தொழிலாளர்களின் அபிப்பிராயங்களை சுதந்திரன் நிருபர் திரட்டச் சென்றபோதே மேற்கண்ட கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமானும், தமிழர் கூட்டணியும் மலையகத் தமிழர்களின் இன்றைய நிலைபற்றி இது கால வரை கூறிவந்த கருத்துக்களை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்த ஜனாப் அஸீஸ் கூறியிருந்த விபரங்கள் வருமாறு:-

* உணவுற்பத்தியில் ஈடுபட விரும்பும் தோட்டத் தொழிலாளருக்கு நிலமில்லை!

* அரசாங்க நிலங்களில் குடியேறி இவர்கள் விவசாயம் செய்தால் பொலிசாரும் இதர அதிகாரிகளும் விரட்டி அடிக்கின்றனர்!

* குடியுரிமை பெற்றிருந்த போதிலும் தோட்டத் தொழிலாளி தன்னை ஒரு இலங்கைத் தமிழன் என்று கூறிக்கொள்ளமுடியாது.

* அவன் தன்னை ஒரு இலங்கைத் தமிழன் என்று கூறினால் அவன் மீது சட்டம் பாய்கிறது.

* அவன் தன்னை இந்தியத் தமிழன் என்று கூறினால் அவனை வகுப்புவாதி, நாட்டுத் துரோகி என்று கூறுகிறீர்கள்.

* 88 சத வீதம் அந்நிய செலவாணியை தேடித்தரும் தோட்டத் தொழிலாளிகளை திண்டத்தகாதவர்களாக இந்த அரசு நடத்துகிறது—அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. இதற்குப் பெயர் தான் சோசலிசமா!

* உணவுப்பற்றுக் குறையால் பட்டினிச்சாவுகள் மலையகத்தில் ஏற்படுகின்றன.

* தோட்டங்களில் மரண விகிதம் அதிகரித்துள்ளது. வறுமை காரணமாக தோட்டப் பெண்கள் கருத்தரிக்கும் சக்தியை இழந்து வருகின்றனர். இதனால் பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

* பட்டினி காரணமாக தொழிலாளிகளின் உழைக்கும் சக்தி குறைந்து விட்டது!

* தோட்டத் தொழிலாளர்கள் பிச்சை எடுக்கிறார்கள்; தோட்டப் பெண்கள் வறுமை காரணமாக தங்கள் கற்பையே விலைபேசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்!

## திருவிளக்குப் பூசைகள்

எதிர்வரும் 29—11—74 வெள்ளிக்கிழமை (பூரணை விரதத்தை முன்னிட்டு) அன்று மாலை 6.00 மணி முதல், திருவிளக்கு பூசைகள் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணை. ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்திலும், (நாச்சிமார் கோயில்) யாழ். ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திலும் பக்தி பரவசமூட்டும் வகையில் சிறப்புற நடைபெறவுள்ளது. மேற்படி பூசைகள் ஒவ்வொரு மாதமும் பூரணை தினங்களில் மாலையில் நடைபெற்று வருகின்றன.


கிங்ஸ்லி 6-வது வெற்றி வாரம்!

விஷ்ணுவர்தன, சந்திரகலா நடித்த-

சித்திராலயா அளிக்கும்

ஸ்ரீதரின் அலைகள்

5-வது வாரம்

கெப்பிட்டல்

சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-

ராஜ ராஜ சோழன்

தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்" தமிழ் வண்ணச் சித்திரம்.

3-வது வாரம்

பிளாஸா — வெலிங்டன்

ஜெய்சங்கர், பாரதி, சோ, மனோரமா, சுபா நடித்த

பொன் வண்டு

7-வது வாரம்

லிடோ [யாழ்நகர்]

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-

கே. பாலசந்தரின் எதிரொலி

இப்பொழுது எதிரொலிக்கிறது!

செல்லமகால் 7-வது வாரம்

சந்தர்ப்பம்—சூழ்நிலையினால் குற்றம் செய்தவர்கள் அதன் பலாபலன்களின் எதிரொலிக்கு தப்பமாட்டார்கள் என்பதை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்.

சிவாஜி, கே. ஆர். விஜயா, நாகேஷ்

எஸ். எஸ். ராஜேந்திரன்,

லட்சுமி - சிவகுமார் - ஜோதிலட்சுமி,

காலஞ்சென்ற வி. எஸ். பாலையா நடித்த-

கே. பாலசந்தரின் எதிரொலி

• நீதிமன்ற வழக்கு விசாரணைக் கட்டங்கள் கட்டாயம் பார்க்கவேண்டியவை.

மலருக்கு மலர் தாவும் வண்டாக இருக்கவில்லை அவன்! மலர்களையே தன்னை நோக்கித் தாவச் செய்யும் மன்மதனாக விளங்கினான்! முடிவு!

கெயிட்டியில் 3வது வாரம்

ரீங்காரமிடும் பொன் வண்டை தரிசியுங்கள்.

ஜெய்சங்கர், பாரதி, மனோரமா, ஜெய்சித்ரா, சுருளிராஜன், சோ நடித்த-

பொன் வண்டு

கேட்டு ரசிக்க தயாராகுங்கள்:- யாருக்காக, இந்த மாளிகை ரத்ன மாளிகை! பாடியவர்:- மனோரமா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட[illegible] கொழும்பு பண்டாரநாயகமாவத்தை 194 ஆ. இலக்கத்தில் 1974ம் வருடம் நவம்பர் மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.